ஜன விநோதினி.

இல. 4. ஏப்பிரல்மீ 1870. புஸ்த. I.

இந்து வாலிபருடைய கடமைகள்.

(தொடர்ச்சி)

முந்தின ஓர் இலக்கத்தில் இந்து வாலிபர் தங்கள் தேசத்திற்குச் செய்யவேண்டிய கடமைகளைக்குறித்துப் பேசத்தொடங்கினதில், முதலாவது அவற்றை அவர்கள் நன்றாய்ச் சிந்தித்து உணரவேண்டியது மகா அவசியமான காரியமென்று சொன்னோம்.

இரண்டாவது, இந்து வாலிபர் தங்கள்பேரில் சுமந்திருக்கிற பெரிதான கடமைகளைக் குறைவற நிறைவேற்ற விரும்பினால் அவர்கள் நலமும் பிரயோஜனமுமான அறிவுகளை அடையவும், தங்கள் மநோர்தத்துவங்களைத் தகுதியாய் விர்த்திசெய்யவும பிரயாசப்படவேண்டும். ஒவ்வொருவனும் தன் நிலைமை சாவகாசம் முதலிய ஏதுக்களுக்குத் தக்கபடி சோம்பலன்னியில் பிரயாசப்பட்டு, கிடைக்கக்கூடிய பிரயோஜனமுள்ள அறிவுகளைச் சம்பாதித்து, தன் மனதை விர்த்திசெய்வானானால், அது எவ்வகையிலும் பிரயோஜனமாயிருக்கும். அப்படிச செய்கிறவன் தன் சொந்த விஷயத்தில் சந்தோஷமாய் வாழ்வதற்கும், மற்றவர்களுக்குப் பிரயோஜனமுள்ளவனாயிருப்பதற்கும தகுதியுள்ளவனாவான்.

இதனால் எல்லாரும் உயர்ந்த கல்விகளையும் சாஸ்திரங்களையும் கற்றுத் தேறவேண்டுமென்பது கருத்தல்ல. அது அசாத்தியமானகாரியம். அப்படிச செய்கிறது மிகவும் சொற்பப்பேர்களாலே மாத்திரம் கூடியது. ஆனால் அவரவர் தம் நிலைமை அலுவல் முதலியவற்றிற்கிணங்க தமக்குள்ள காலத்தை விவேகமாய்ச் செலவிடவும், சோம்பலன்னியில் பிரயாசப்படவும் சம

மதிப்பார்களாகில், எண்ணிறந்த வாலிபர்கள் பிரயோஜனமுள்ள அறிவையும் மனோவிர்த்தியையும் லகுவாய் அடையக்கூடுமென்ப தற்குச் சந்தேகமில்லை. (Franklin) பிரான்கிளின் என்னும் மகா கீர்த்திபொருந்திய வித்வான், சிறுபிராயத்தில் ஒரு அச்சாபீசில் வேலைகற்றுக்கொள்ளும்படி நியமனமானூர். அவர் மற்ற பால் யர்களோடு சேர்ந்து வீண்காலக்ஷேபஞ்செய்யாமல் விவேகமா ய்த் தம் காலத்தைச் செலவிட்டு, தமக்குக் கிடைத்த சாவ காசமான நேரத்தையெல்லாம் கல்விமுயற்சி மனோவிர்த்திக்கென் றே சர்வஜாக்கிரதையுடன் பிரயோகித்து வந்ததினுல், கடைசி யில் அவர் அக்காலத்திலுள்ள சாஸ்திரிகளுக்குள் மிகவும் பேர்ப் போனவரானூர். மேலும் அவர் சொந்த முயற்சியினுல் அடைந்த கல்வித்திறமை மனோவல்லமையின் மூலமாய்த் தமது தேசத்தில் உயர்ந்த துரைத்தன உத்தியோகமொன்றையும் பெற்றூர். இப் படியே தாழ்ந்த ஸ்திதியிலிருந்தவர்கள் தங்கள் முயற்சியினுல் மனோவிர்த்தியடைந்து மேலான ஸ்திதிக்கு வந்திருக்கிறூர்களென் பதற்கு எண்ணிறந்த திருஷ்டாந்தங்களுண்டு.

அநேக வாலிபர் சோம்பலிலும், வீண் உல்லாசவேடிக்கை களிலும், சிலவேளை அக்கிரமத்திலும் போக்கிவருகிறகாலத்தில் கொஞ்சத்தைமாத்திரம் அவர்கள் விவேகமாய்ச் செலவிடுவார்க ளானுல், அதனுல் அவர்கள் எவ்வளவோ பிரயோஜனமுள்ள அறிவையும் மனோவிர்த்தியையும் அடைந்துகொள்வார்களென்ப தற்குச் சந்தேகமில்லை. அவர்கள் படிப்பு விஷயத்திற்கு நாடோ றும் கொஞ்சநேரத்தைமாத்திரம் ஒழுங்காயும் விடாப்பிடியாயும் செலவிட்டுவருவார்களாகில், ஒரு வருஷக்காலத்திற்குள் நலமும் பிரயோஜனமுமான அநேக புஸ்தகங்களை வாசித்து முடிக்கவும், அதினுல் மனிதர்களையும் பொருள்களையும் பற்றிய அநேக பிர யோஜனமுள்ள காரியங்களை அறிந்து மனதை விசாலமாக்கவும் இடமுண்டாயிருக்கும்.

நமது தேசத்து வாலிபர் நீனுவித நல்லறிவுகளைச் சம்பாதிப் பதற்கும் மனோவிர்த்தி செய்வதற்கும் அவசியமான அநுகூ லங்கள் முன்னெக்காலத்திலும் இராதவண்ணமாய் இக்காலத்தில் உண்டாயிருக்கின்றன. மேலும் படித்துத் தேறினவர்கள் மேன் மையடையவும், அவர்கள் பட்ட பிரயாசைக்குத் தக்க பிரயோ ஜனத்தைப் பெறவும் இக்காலத்தில் இடமுண்டாயிருக்கிறது.

கல்விமுயற்சி மநோவிர்த்தி செய்வதற்கு பால்யமே ஏற்ற காலம். இந்தக் காலத்தை யாவரும் சர்வஜாக்கிரதையுடன் பிர யோஜனப்படுத்தவேண்டும். அநுபவஞானத்தில் முற்றின ஒரு கல்விமான் இக்காரியத்தைப் பற்றிப் பேசுமிடத்து: "ஒருவன் பதி னைந்து வயசுமுதல் இருபத்தைந்து வயசுவரையுள்ள காலத்தைப் பிரயோஜனமான அறிவுகளை சம்பாதிப்பதிலும் மநோவிர்த்தி செய்வதிலும் பிரயோகியாமல் வீணாய்க் கழித்துவிடுவானாகில், பின்பு ஜீவகாலமுழுமையிலும் தன் மனதை விர்த்திசெய்வதற்கு ஏற்ற சமயமும் ஏதுக்களும் அவனுக்குக் கிடைக்கிறது சந்தேகம். ஒரு வாலிபன இருபத்தைந்து பிராயத்திற்குள்ளாக பிரயோ ஜனமுள்ள புஸ்தகங்களை வாசிக்கவும், மனிதர்களையும் பொருள் களையும பற்றிக் கூர்மையாய்க் கவனித்து அறியவும், சகலத்தையும் பற்றிச சிந்தித்து நிதானிக்கவும் தக்க நல்வழக்கங்களை உண்டு பண்ணிக்கொள்ளாவிட்டால், பின்பு அவ்வாலிபன் எக்காலத்தி லாவது அப்படிச் செய்வதற்கு இடமிருக்குமோவென்பது சந்தே கமானகாரியம். அப்படிப்பட்டவனைச் சூழ எப்பக்கத்திலும் எண்ணிறந்த அதிசயங்கள் நிறைந்திருந்தபோதிலும் அவன் அவற்றைக் கவனிக்கவாவது கிரகிக்கவாவது ஏதுவிராது" என் கிறார்.

ஒரு வாலிபனானவன் புஸ்தகங்களை வாசிப்பதிலும், மநோ விர்த்திக்காக முயற்சிசெய்வதிலும் தன காலத்தையும் கவனத் தையும் செலுத்திவருவானாகில், அவன் பின்னுக்கு மேன்மை யடையவும் பிரயோஜனமுள்ளவனாகவும் ஏதுவிருப்பதுந்தவிர, அவன் பாலியகாலத்தில எண்ணிறந்த துர்ப்பழக்கங்கள் மோ சந்களுக்குத் தப்பிக்கொள்ளவும் இடமுண்டாகும். கல்விமு யற்சி செய்யவும் நல்ல புஸ்தகங்களை வாசிக்கவும் பிரியப்படு கிறவனுக்கு, சாவகாசமான நேரங்களை எப்படிப் பின்னிட லாமென்று தெரியாமற்போகாது. தன் காலத்தை மிக இன் பமாயும் பிரயோஜனமாயும் செலுவழிக்கும் வகை அவனுக்குத தெரியுமாகையால், வீணரும் துஷ்டருமானவர்களோடு சேரவா வது, துன்மார்க்கங்களில் செல்லவாவது அவனுக்கு இடமிராது. அவனுடைய மனமானது, எக்காலத்திலும் எத்தேசத்திலுமுள்ள வித்வசிரோமணிகளாகிய நல்லோர் பெரியோர் எழுதிவைத்த அருமையான பிரபந்தங்களில் அடங்கிய நானாவித அறிவுகளா

கிய விலையுயர்ந்ததும் திகட்டாததுமான அமுதைச் சாவகாசமான நேரங்களிலெல்லாம் ஆவலுடன் உண்டு களிக்கும். நல்ல புஸ்தகங்களைச் சிநேகித்து வாசிக்கிறது, நல்லோர் பெரியோரோடு சிநேகம்பண்ணிப் பழகுகிறதற்குச் சமானம். இப்படிச் செய்கிறவன் துஷ்டருடைய சகவாசத்தை வெறுப்பதற்கும், துன்மார்க்கங்கள் சிற்றின்பங்களின் கண்ணிகளுக்கு வெகுதூரம் விலகிநிற்பதற்கும் ஏதுவுண்டாகும்.

மனோவிர்த்திக்காக பால்யர்கள் படிப்புமுயற்சிகளைச் செய்ய வேண்டுமென்பதைப்பற்றிப் பேசுகையில், நமது தேசத்திலுள்ள அநேக வாலிபருக்குள் காணப்படுகிற ஒரு பெரிய குறைவைக் குறித்து இங்கு சில வார்த்தைகளைச் சொல்வது மிகவும் அவசியமாகத் தோன்றுகிறது. அது என்னவெனில்: பால்யர்களில் பெரும்பான்மையோர் தங்கள் படிப்புமுயற்சிகளில் ஞாபகசக்தியை விசேஷமாய்ப் பிரயோகிக்கிறார்களேயன்னியில், பகுத்தறிந்து நிதானிக்கும் புத்திதத்துவத்தைப் பிரயோகிப்பது மிகவும அபூர்வந்தான். பொதுவாய் வாலிபர்கள் புஸ்தகங்களை வாசிக்கையில் தங்கள் மனோவிர்த்தியைப் பிரதான நோக்கமாகக் கொள்ளுகிறதில்லை; அவர்கள் வாசிக்கும் சங்கதிகளைப்பற்றிச் சிந்திக்கிறதுமில்லை, நிதானித்துப் பார்ப்பதுமில்லை. புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருக்குங் காரியங்கள் பொய்யானவைகளோ மெய்யானவைகளோ என்றுவது, அல்லது அவற்றினின்று அநுமானித்துக் கொள்ளவேண்டிய சத்தியம், படித்துக்கொள்ளவேண்டிய புத்தி என்னவென்றுவது அவர்கள் யோசித்துப் பார்க்கிறதில்லை.

அநேக வாலிபர் தாங்கள் படிக்கிறவைகளை மற்றவர்களுக்குச் சொல்லும்பொருட்டாகவே புஸ்தகங்களிலுள்ள சங்கதிகளைச் சாதாரண கதைகளைபபோல ஞாபகம்பண்ணிக்கொள்ளுகிறார்களே தவிர, அவற்றைப்பற்றி யோசனை முதலியதொன்றும் செய்கிறதில்லை. வேறு அநேக பால்யாகள் தாங்கள் வாசிக்கும் சங்கதிகளின் பொருளையாவது, உச்சரிக்கும் வார்த்தைகளின் அர்த்தத்தையாவது, கிரகித்துக்கொள்ளக் கிஞ்சித்தும் கவலைப்படாமல், கிளிப்பிள்ளையைப்போல, அவற்றைக் குருட்டுப்பாடம் பண்ணுகிறார்கள். இது மிகவும் தப்பிதமும் தீமையுமான வழக்கம். இப்படிப்பட்ட படிப்பினுல் கல்விமுயற்சியின் பிரதான நோக்கமாகிய மனோவிர்த்தி சற்றேனகிலும் நடைபெறுது. நாம் சாப்பிடுகிற போஜனமா

னது எவ்வளவிற்கு ஜீரணமாகி, இரத்தமாக மாறிச் சரீரத்தை வளரச்செய்கின்றதோ, அவ்வளவிற்குத்தான் அப்போஜனத்தினால் நமக்குப் பிரயோஜனமுண்டாகும். ஜீரணிக்கப்படாத போஜனத்தினால் நமக்குத் தொந்தரவேதவிர யாதொரு பிரயோஜனமுமுண்டாகாது. அப்படியே கவனம், யோசனை, பகுத்தறிவு, நிதானிப்பு முதலியவற்றைப் பிரயோகியாமல் ஞாபகசக்தியைமாத்திரம் கையாடிப் பாடம்பண்ணுகிற சங்கதிகள், ஜீரணிக்கப்படாத போஜன பதார்த்தங்களைப்போலவே அப்பிரயோஜனமுள்ளவைகளாய்ப் போம். நாம் படிக்கிறவைகளைப் பற்றிப் போதுமானஅளவு சிந்தனைசெய்து, அவற்றின் பொருள், தன்மை, உண்மை முதலியவற்றை நன்குய்க் கவனித்து, நிதானித்து, அறியவேண்டும். இவ்வித விவேகமான படிப்புமுயற்சிகளினாலேதான் மனது விர்த்திபெற்று, விசாலமாகி, முன்னில்லாத திறமைகளையடையும்.

நமது தேசத்திலுள்ள எண்ணிறந்த சுதேசப் பள்ளிக்கூடங்களில் வாசிக்கிற பிள்ளைகள் ஆரம்பத்திலேயே தீமையான வழக்கத்திற்குட்படுகிறார்கள். பொதுவாய் அப்பள்ளிக்கூடங்களில் வாசிக்கிற சிறுவர்களுடைய முக்கிய வேலை, அர்த்தந்தெரியாத வார்த்தைகளையும், பொருள்விளங்காத பாட்டுகளையும், குருட்டுப் பாடம் பண்ணுவதேயொழிய வேறல்ல. அப்பாடசாலைகளில் சிறுவர்கள், வாசிக்கும் சங்கதிகளின் பொருளை, கிரகித்துக்கொள்ளும்படிக்கு ஒரு முயற்சியும் செய்யப்படுகிறதில்லை. உபாத்திமார்களாவது பெற்றோர்களாவது சிறுவர்களுடைய சக்திக்குத் தகுந்த விஷயங்களைத் தெரிந்தெடுத்து, அவர்கள் அவற்றைக் கவனமாய்ப் படிக்கவும், அவற்றின் பொருளைக் கிரகித்துக்கொள்ளவும், அதனால் அவர்கள் புத்திகூர்மை அடையவும் பிரயத்தனஞ்செய்கிறதில்லை. சிறுவர்களுடைய ஞாபக சக்தியைமாத்திரம் முயற்சிக்கிறதும், அவர்களுக்கு யாதொரு இன்பத்தையுங்கொடாததுமான பாடங்களைக் கொடுத்து வெகுநேரமாக அவர்களை வருத்தப்படுத்துகிறது தீமையான காரியம். அதினால் அவர்களுடைய மெல்லிய தேகத்திற்கும் மனோதத்துவங்களுக்கும் சேதங்களுண்டாகும். இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களில் வாசிக்கிற சிறுவர்களில் அநேகம்பேர், இன்பமற்றதும் வருத்தமுள்ளதுமான பாடங்களின் பேரிலுள்ள வெறுப்பினால், இரண்டொரு நாளைக்குப் பள்ளிக்கூடத்திற்குப் போகாதிருக்கும்பொருட்டு, தங்களுக்காவது அல்லது

உபாத்தியாருக்காவது ஏதாகிலும் சுகவீனமுண்டாகாதா வென்று ஆவலுடன் ஆசிக்கிறதில்லையா?

ஆரம்பத்தில் விவேகமற்ற விதமாய்ப் படிக்கும் வழக்கத்திற் குட்பட்ட சிறுவர்கள் பெரியவர்களான பின்னும் பிரயோஜனமற்ற விதமாய்த்தான் படித்துவருகிறார்கள். இக்காலத்தில் நமது தேசத்தில் நானாவித பரிக்ஷைகளுக்கென்று படித்துவருகிற எண்ணிறந்த வாலிபர்களில் பெரும்பான்மையோர் ஞாபகசக்தியைமாத்திரம் பிரயோகித்துக் குருட்டுப்பாடம் பண்ணிவருகிற நிமித்தம், அவர்கள் தங்கள் பரிக்ஷைப் படிப்புகளினால் அடையும் பிரயோஜனம் மிகவும் சொல்பந்தான். இனி ஒரு சமயத்தில் பாலியர்கள் படிப்பு முயற்சிகளைச் செய்வதில் கவனிக்கவேண்டிய சில முக்கிய விதிகளை எடுத்துக்காட்ட உத்தேசிக்கிறோம்.

மேலும் நமது வாலிபர்களுக்குள் வேறொரு குறைவுண்டு. மிகவும் சொற்பப்பேர்களைத்தவிர மற்ற வாலிபர்களெல்லாம் படிப்பு முயற்சிகளைச் செய்வதற்கு அவர்கள் கொண்டிருக்கிற பிரதான நோக்கம் துரைத்தன உத்தியோகங்களைச் சம்பாதிப்பதுதான். நமது தேசத்தில் தொன்றுதொட்டு சர்க்கார் உத்தியோகமொன்றே மேன்மையுள்ள ஜீவனமென்று ஜனங்களால் எண்ணப்பட்டு வந்திருக்கிறது. திரவியசம்பாத்தியம், சொல்சோத்தி, அதிகாரம், கனம் முதலியவற்றிற்குத் துரைத்தன உத்தியோகந்தான் ஏற்றதென்றும், அதையே யாவரும் தேடவேண்டுமென்றும், மற்றெவ்வித தொழில்களும் தாழ்வானவைகளென்றும், நமது ஜனங்கள் சாதாரணமாய் எண்ணுவதுண்டு. இது பெரிய தப்பிதமான எண்ணம், இதினால் தேசத்திற்குப் பெரிய நஷ்டங்களுண்டாகின்றன.

செல்வம், நாகரீகம், வல்லமை முதலியவற்றில் உயர்ந்திருக்கிற ஐரோப்பிய தேசங்களில் காரியமிப்படியல்ல. அவ்விடங்களில் வாலிபர்கள் சாதாரண பள்ளிக்கூடங்களில் போதுமான அளவு கல்விகற்றபின், தங்கள் நிலைமை, திறமை, மனப்போக்குகளுக்குத் தக்கபடி, சிலர் வைத்திய சாஸ்திரங்களைக் கற்று வைத்தியத்தொழில் செய்யவும், சிலர் சிற்பம் முதலிய சாஸ்திரங்களைக் கற்று எஞ்சினீர் வேலைகளைச் செய்யவும், சிலர் பலவித கைத்தொழில்கள், வேளாண்மைத்தொழில்கள், வியாபாரங்கள் ஆகிய இவற்றில் எதையாகிலும் தெரிந்துகொண்டு அதினால் ஜீவனஞ்செய்யவும், சிலர் உயர்ந்த கல்விசாஸ்திரங்களை நன்

ருயக் கற்று மற்ற ஜனங்களுக்குப் பிரயோஜனமாகப் போதகத் தொழிலையாவது, புஸ்தகங்கள் பத்திரிகைகள் முதலியவற்றைப் பிரசுரஞ்செய்யும் வேலையையாவது பார்க்கவும், சிலர் துரைத்தனத்தைச்சேர்ந்த உத்தியோகங்களைச் செய்யவும், பிரயாசப்படுவார்கள். இவ்விதமாய் அத்தேசங்களில், ஜனங்கள் எல்லாத் தொழில்களையும் கனமுள்ளவைகளாக மதித்து, அவற்றை விருப்பத்தோடும் ஊக்கத்தோடும் செய்துவருகிறபடியால், சகல தொழில்களும் வித்தைகளும் மென்மேலும் அபிவிர்த்தியாகிப் பூரணப்பட்டுவருகின்றன. இதனால் அத்தேசங்கள் நாகரிகம், செல்வம், வல்லமை முதலியவற்றில் மென்மேலும் உயர்வதைக் காண்கிறோம்.

சுதேச வாலிபர்கள் சர்க்கார் உத்தியோகங்களைத்தவிர மற்றெவ்வித தொழில்களையும் தாழ்வானவைகளென்று தள்ளுகிறதினால், தங்களுக்கும் தங்கள் தேசத்திற்கும் பெரிய நஷ்டங்களை உண்டாக்குகிறார்கள்.

வாலிபர்களெல்லாரும் துரைத்தன உத்தியோகங்களையே நோக்கிக்கொண்டு படிப்புமுயற்சிகளைச் செய்துவருகிறார்களே, ஆனால் அவர்களில் பாதிப்பேருக்காவது அவ்வுத்தியோகங்கள் கிடைக்குமென்பது சந்தேகமான காரியம். பேறும் அவ்வுத்தியோகங்களைச் சம்பாதித்துக்கொண்டவர்களிலும், மிகவும் சொற்பப்பேரைத்தவிர மற்ற யாவரும் தாழ்ந்தவேலைகளில்தான் இருக்கும்படி நேரிடுகிறது. ஆகையால் மற்றத் துறைகளில் பிரயாசப்பட்டால், மேன்மையும் பிரயோஜனமுமான அந்தஸ்துக்கு வரக்கூடிய அநேக வாலிபர்கள், சர்க்கார் உத்தியோக ஆசையினால், தாழ்ந்த ஸ்திதியிலேயே இருக்கிறார்கள். நல்ல கல்விமுயற்சிகளினால் மனோவிர்த்தியடைந்து அதிகப் பிரயோஜனப்படக்கூடிய அநேக வாலிபர், துரைத்தன உத்தியோக வாஞ்சையினால், சில பரீட்சை புஸ்தகங்களை ஆவலோடு வாங்கி, அதிவிரைவாய்ப் படித்து, பரீட்சையில் ஒருவாறு ஒப்பேறியபின்பு தாங்கள் கோரின உத்தியோகங்களுக்காகக் காத்திருந்து வீண்காலம் போக்குகிறார்கள். பெரும்பாலும் இவ்விதப் பரீட்சைப் படிப்புகளினாலுண்டாகும் பிரயோஜனம் அவ்வாலிபர்களுக்கு மிகவும் சொற்பம், தேசத்திற்கோ அதிலும் சொற்பம்.

சுதேச வாலிபர்களில் சிலர் ஐரோப்பிய சிற்பம் முதலிய சா

ஸ்திரங்களைக் கற்று எஞ்சினீர் வேலைகளைச் செய்யவும், சிலர் ஐரோப்பிய இந்திய வைத்தியசாஸ்திரங்களைக் கற்று வைத்தியத் தொழில் செய்யவும், சிலர் பலவித வேளாண்மைத்தொழில்கள், பிரயோஜனமுள்ள பல கைத்தொழில்கள், நானாவித வியாபாரத்தொழில்கள் ஆகிய இவற்றில் அவரவர்க்கு இசைந்தவற்றைத் தெரிந்து நடப்பிக்கவும் ஏற்பட்டார்களாகில், தங்களுக்கு மிகுந்த பிரயோஜனத்தையும், தங்கள் தேசத்திற்குப் பெரிய நன்மைகளையும் விளைவிப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. நமது தேசத்தின் தற்கால ஸ்திதிக்கு மேற்சொல்லிய தொழில்களில் அநேகம் மிகவும் அவசியமாயிருக்கின்றன. நமது ஜனங்கள் இவ்வித தொழில்களை ஊக்கத்தோடும் ஆசையோடும் செய்துவராவிட்டால் தேசம் விருத்தியடையமாட்டாது.

சிநேகம்.

சிநேகமானது யாதொரு தொடர்பை அல்லது பயனையிட்டு உண்டாகும் உறவல்ல. அல்லது தாய் பிள்ளை, அண்ணன் தம்பி, புருஷன் பெண்சாதி இவர்களுக்குள் இயற்கையாய் வளரும் பாசமுண்டே அதுவுமல்ல. பின்னை சிநேகம் என்பதியாதெனின், ஒருவர் மனதிற்கும் இன்னொருவர் மனதிற்குமுள்ள பொருத்தத்தினால் இருவர் மனதிலும் உண்டாகும் பற்றுதலாம். குலம், தொழில், கல்வி, மேன்மை முதலிய புற ஒற்றுமைகள் ஒன்றேனும் இல்லாவிடினும், மன ஒற்றுமைமாத்திரம் உண்டேல் அது போதும் சிநேகத்திற்கு

நம்பிக்கையும் மதிப்பும், வேரும் கிளையும்போலச் சிநேகத்தை நிலைத்தோங்கச்செய்கின்ற உறுப்புகளாம். ஒருவர்பேரில் ஒருவற்கு நம்பிக்கையில்லாத சிநேகம் நிலையாது மனதில் சற்றுவது கல்மஷம், களங்கம், சந்தேகம் என்பனவற்றிற்கு இடங்கொடுத்தால் நெடுநாட்பழகிய சிநேகமும் முறிந்துபோம். அர்த்தராத்திரியில் தலைகொய்ய யத்தனித்தமை கண்டும், காரியவசம் என்றவுடன் கண்ணயர்ந்து நித்திரைசெய்த விக்கிரமாதித்தனுக்குப் பட்டியின்பேரிலிருந்த நம்பிக்கைபோல் சிநேகிதன் பேரில் பூரண நம்பிக்கை இருக்கவேண்டும். இரண்டாவது ஒருவ

ரைப்பற்றி ஒருவற்கு மதிப்புவேண்டும். நீர்அளவாய் நிற்கும் தாமரைபோல மதிப்பளவாய் நிற்கும் சிநேகமும். மதிப்புக் குறையக்குறையச் சிநேகமும் குறையும், அது பெருகப்பெருகச் சிநேகமும் பெருகும். ஆதலால் சிநேகத்தில் நம்பிக்கையும், மதிப்பும் எப்பொழுதும் குறைவின்றி நிலைக்கவேண்டில் நல்லொழுக்கமும் உண்மையுமுள்ள சிநேகிதர் வேண்டும். இதனால்தான் கண்டவரோடெல்லாம் சிநேகஞ்செய்யாமல் நன்காராய்ந்து செய்ய வேண்டுமென்பது. "பரீஇப்பலரோடு பன்னாட்முயங்கிப், பொரீஇப்பொருட்டக்கார்க் கோடலேவேண்டும்" என்றார் சமண முனிவர்.

ஆகையால் ஒருவருடைய குணாதிசயங்களை நன்றாய் அறியுமுன் அவரோடு சிநேகஞ்செய்யாதே. நல்லோருடைய சிநேகம் வளர்பிறைபோல நாளுக்குநாள் வளர்ந்து, நுனிக்கரும்பிலிருந்து தின்றுவந்தால் இருக்கும் ருசிபோல வரவர மதுரமாகும். தீயோருடைய சிநேகம் வரவரத் தேய்ந்து இறுதியில் கேடுவிளைக்கும். ஆதலால் அன்பு, அறிவு, நீதி, ஒழுக்கம், உதாரம், உபகாரம் ஈஸ்வரபக்தி இவைகளையுடைய நல்லோர் சிநேகத்தை நாடு. தற்பொழிவுக்காரன், தற்பெருமைக்காரன், வீணன், மூடன், துன்மார்க்கன், பிடிவாதி இவர்களுடைய உறவைக் கனவிலும் நாடாதே.

உண்மையுள்ள சிநேகிதன் கிடைத்தால் அவனுறவை ஒருக்காலும் விட்டுவிடாதே. சிநேகத்திற்கு அடாத குற்றங்களாகிய அன்பில்லாமை, நம்பிக்கைத்தாழ்ச்சி என்கிற இவைகளைத் தவிர மற்றென்ன குற்றஞ்செய்தாலும் அதை க்ஷமித்துக்கொள்ள வேண்டும். "ஒருவர்பொறை இருவர்நட்பு."

சிநேகமற்ற வாழ்நாள் சுவையற்ற கனிபோலாம். உத்சாகமும் ஊக்கமும் செழித்தோங்காது, இன்பமும் குன்றிப்போம். உத்தமசிநேகம் கிடைத்தால் அது ஒருவற்குச் சுகத்தில் உறுதியும், துக்கத்தில் ஆறுதலும், சோதனையில் ஊன்றுகோலும், ஆபத்தில் உயிர்த்துணையுமாம். இதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறோம்.

ஓர்காலத்தில் ஸைராகியூஸ் என்னும் நகரத்தில் அரசாட்சி செய்துகொண்டிருந்த தியோனிசியஸ் என்னும் மன்னன், தேமான் என்று பேருள்ள ஒருவனுக்கு மரணாக்கினைத் தீர்ப்புச்செய்தான். அப்பொழுது அந்தக் குற்றவாளி தீர்ப்பு நிறைவேறக் குறித்த

தினத்துக்கு முந்தித் தன் ஊருக்குப்போய் வீட்டுக்காரியங்களை ஒழுங்கு செய்துவிட்டுவரத் தனக்கு உத்தரவுகிடைக்கவேண்டுமென்று மனுப்பண்ணிக்கொண்டான். அதற்கு இடங்கொடுக்க அரசனுக்குச் சற்றும் மனமில்லாதபடியால், அசாத்தியமான ஒரு நிபந்தனையைக் கட்டளையிட்டால் அப்புறம் பேசமாட்டான் என்று ஆலோசித்து, தேமானைப்பார்த்து: நீ திரும்பிவராத பட்சத்தில் உன்னுடைய மரணக்கினையைத் தன்பேரில் சுமந்து கொள்ளச் சம்மதிக்கிற யாராவது ஒருவனைப் பிணையாக வைத்து விட்டு, நீ உன் ஊருக்குப் போய்வரலாம் என்று உத்தரவுசெய்தான்.

இந்தச் சமாசாரம் தேமானுடைய சிநேகிதனாகிய பிதியாஸ் என்பவன் கேள்விப்பட்ட உடனே, அரசனிடம் நேரேபோய்: ராஜாவே! நான் தேமானுக்குப் பிணைப்படுகிறேன், அவன் தலைக்குப் பதிலாக என் தலைதான் ஈடு, அவனுக்கு உத்தரவுகொடுக்க வேண்டும் என்று பிரார்த்தித்தான். உடனே தியோனிசியஸ் திடுக்கிட்டு இதென்ன புதுமை, ஒருவனுக்காக ஒருவன் தலையைப் பிணையம் வைப்பானா? நல்லது எப்படி முடிகிறது பார்ப்போம் என்று தனக்குள் சிந்தித்து, பிதியாஸைக் காவலில் போடுவித்து, தேமானை விடுதலைசெய்தான்.

மரணக்கினைக்குக் குறித்ததினமும் சமீபித்தது, தேமானைக் காணோம், அப்பொழுது தியோனிசியஸ் என்னும் மன்னன் பிதியாஸ் இப்பொழுது எப்படியிருக்கிறான் பார்ப்போம் என்று சொல்லி, காவற்கூடத்துக்குப்போய் அவனோடு சிநேகத்தைக் குறித்து நெடுநேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்து கடைசியில் அவ்விஷயத்தைப்பற்றி தன் அபிப்பிராயம் இதுவென்று அவனுக்கு வெளியிட்டான். எந்த மனுஷனுக்கும் தன் காரியம் தான் பிரதானம். ஒருவன் எதைச்செய்தாலும் அதற்கெல்லாம் சுயபிரயோஜனந்தான் மூலம். நீதி, சிநேகம், உபகாரம், தேசாபிமானம் என்றித்தியாதி நாமங்களெல்லாம் சாதாரண ஜனங்களை அடக்கி ஆளும்படியாக அறிவாளிகள் கட்டிய கட்டுப்பாடேயொழிய வேறல்லவென்று அரசன் சொன்ன வார்த்தை காதில் விழுந்தவுடனே, பிதியாஸினுடைய மனம் கொதித்தது மறுமொழி சொல்ல வாய்துடித்தது. உடனே அவன் தைரியமும் சாந்தமுமாய் அரசன்முகம் நோக்கி: ராஜனே! என் சிநேகி

தன் சொல்தவறினன் எனனும் அபவாதத்தைக் கேட்டுச சகிக் கிறதைவிட, மரணத்தைச சகிககிறது எனககு ஆயிரமடஙகு லேசானது. அவன் ஒருககாலும வாககுப பிசகமாட்டான. நான இருககிறேன் என்பதைககுறிதது எனககு எவவளவு நிசசயமுணடோ அவவளவு நிசசயமுணடு அவனுடைய உணமையைககுறிததும ஆனாலும என வாஞசை இது, என் சிநேகிதனுடைய ஜீவனும, அவனுடைய யோககியதையும ஒருசேரக் காககபபட வேணடுமெனபது. அதறகாகத தெயவததை நோககிப பிராரததிததுக்கொணடிருககிறேன காறறே, கடலே, என சிநேகிதனுடைய பிரயாணததைத தடைபணணுஙகள. தடைகளை ஜெயிதது வருகிறதற்காக அவன செய்யும் சகல பிரயததனங்களையும அவமாக்குஙகள். அவனுடைய வாஞ்சையும முயறசியும நிறைவேறுமறபோகட்டும எனனுடைய ஜீவனைபபாரககிலும எவ்வளவோ பிரயோஜனமும, அவன மனைவிமககளுககுப பெறுதறகரிய பொருளுமான அவனுடைய ஜீவனை நான என மரணததினால மீட்குமவரையும, தெயவஙகளே அவன வருகையைத தடை செய்யுஙகள அவன் உயிர்போனால என்னுயிரும போவது நிசசயம். அபபடி அவமாயப போகிறதைவிட அவன உயிரை மீட்கும்பொருட்டு எனனுயிரைக கொடுக்கததகக இநத நனமரணம எனககு லபிககுமபடி செய்யுஙகள எனறு அவன் இருகணகளினும நம்பிககை இலஙகததககதாகப பிராரததிததான்

இநத வசனஙகளின கருததையும், இவற்றை வசனிககும போது பிதியாவின முகததில விளஙகிய குணஙகளையும தியோனிசியஸ் கவனிதது நடுநடுஙகிவிட்டான. லோகாநதகாரமுடிய அவன மனதில சததியததின் ஒளி அசசமயததில சறறு வீசினதுபோலிருநதது. ஆயினும அதனால மனதில தெளிவு பிறககாமல மிகுநத கலக்கததுடன எழுநதிருநது அரண்மனைககுப போயவிட்டான.

கடைசியாய் மரணதகினைககுக் குறிதத நாள வநதுவிட்டது. இனனும தேமானைக காணோம. பிணையாளியாக ஏறபட்ட பிதியாவை சிறைசசாலையிலிருநது வெளிபபடுததி இருபுறமும போர வீரர் சூழநதுவர, ஐயையோ' அநியாயம' எனறு பரிதபிககிற ஜனததிரளுககூடே நடததிககொணடுபோகிறாகள. தியோனிசியஸ் எனனும அரசன ஆசசரியமான இநதக காடசியைக கா

ணும்பொருட்டு அதிகாலையிலெழுநது, சுவேதவாணமான அஸ் வஙகள பூணட ஓா பெரிய ரததததினபேரில ஏறிக கொலைக்களத்துக் குவநது, பலவகையான சிநதனைகளுடன கைதியின வரவுபாாத தக காததுககொணடிருககிறுன. இதோ பிாியாஸ வருகிறுன், அவன முகததிலே கிலேசமிலலை, துககமிலலை. தெளிநதபுததி யோடும அழுநதசிநதையோடும அமைதலாய நடநது கொலைக் களததில வநது, சறறுநேரம நினறு கொலைககருவியை நனருயப பாாததுவிடடு, அபபுறம அலாநத செநதாமரைபோன்ற முகத் துடனே ஜனங்களை நோககி சிநேகிதாகளே' என விணணபபத தின்படியும என வாஞ்சையினபடியும நிறைவேறினது தேவாநுக் கிரகமேயனறி வேறிலலை. நேறறுமுதல் எதிாகாறறுயிருககிற தெனபது உங்களுககுத தெரிநதகாரியமே. அதனுலதான என் பிராணசிநேகிதனுகிய தேமான் வருகிறதறகுத் தடையுணடா யிறறு அசாததியமானதைச செயய யார்தான வலலவா. தே வசெயலாய் உணடான இந்தக காற்று அவன சகதிககு மிஞ் சின விஷயமாயிருபபதினுல, அவன சமுததிரததைக் கடநதுவா மாடடாமல இபபொழுது வழியில சங்கடபபடடுககொண்டி ருக்கிறுன. இனறு சிநதபபடுகிற இரததம என் உயிாததுணை வனுடைய ஜீவனை மீடடு இரட்சிககும. இது எனககு அள வறற சநதோஷம என நணபனுடைய உண்மையைககுறிததது உங்கள் மனதில் ஓாணுவாவது சநதேகததுககு இடஙகொடுக் கவேணடாம ஓ, ஓ' என் உததம சிநேகிதனுடைய யோக் கியதையையும நீதியையும்பறறி நீங்கள தபபெணணஙகொளளா தபடி உஙகள மனதைத தெளிவிககககூடுமானுல, அபபொழுது நான மாளப்போகிறது மணவறைககுடபோகிறதுபோல அவவ ளவு சநதோஷததை எனககு விளைவிககும, ஆயினும இபபொ ழுது இது போதும. சீககிரததில என சிநேகிதன் சததியநதவ ருத உததமபுருஷனெனறு வெளியாகும. இநநேரததில அவன் வழியிலே மிகுநத அவதிபபடடு, தனனையும தெய்வசசெயலை யும நொநது சபிதது, காறறையும கடலையும கடிநது சகிக்கமுடி யாத துககததோடும அமைககக்கூடாத வேகததோடும விரைநது வருகிறுன அவன வநது சேருமுன் நான் காரியததை முடிக்க வேணடும. தலையாரிகளே, சீககிரம உங்கள் அலுவலை நிறை வேறறுஙகள என்றுன இவன இபபடிச சொல்லிமுடிககுமுன

இதோ கும்பிலே ஒரு பெரிய அமளியுண்டாயிற்று. அதென்ன அதென்னவென்று ஜனங்களெல்லாம் ஆச்சரியத்துடன் கவனிக்கும்போது, நில்லுங்கள், நில்லுங்கள், கொல்லவேண்டாம் என்று வெகுதூரத்திலிருந்து ஒரு சப்தம் கேட்கப்பட்டது. அதை ஜனங்களெல்லாரும் திரும்பிச்சொல்லவே, எதிரோசை அதிகரித்தது. சற்றுநேரத்துக்குள் ஒருவன் ஒரு குதிரையின்மேல் தலைதெறிக்கத்தக்க ஓட்டமாய் நாற்காற்பாய்ச்சலில் விட்டுக்கொண்டு வருகிறான், அது கண்டு கும்பலெல்லாம் கலைந்து விலகி வழிவிட்டது. அவன் கொலைக்களம் வந்து சேர்ந்தவுடனே குதிரையினின்று குதித்து, மரண ஆக்கினைசெய்யக் குறித்த இடத்தின்மேல் விரைந்தேறி, பிதியாஸைக் கழுத்திறுகக் கட்டிக்கொண்டு, பிழைத்தாய், என் நண்பனே! நீ பிழைத்தாய், தெய்வத்துக்கு ஸ்தோத்திரம். இனி எனக்கு என்னவேண்டும். என் சொந்த உயிரிலும் ஆயிரமடங்கு அதிகமான என் சிநேகிதனுடைய உயிரை அபாயத்துக்குள்ளாக்கினேனே என்ற மனவேதனை என்னைவிட்டொழிந்தது என்றான் அப்பொழுது பிதியாஸுக்கு மனங்கலங்கி, முகம் வெளுத்தது அரை உயிராய்ப் போய்விட்டது. அவன் தேமானுடைய மார்பிற்சாய்ந்து கிடந்தபடியே அண்ணாந்துபார்த்து, கண்ணீர் மாலைமாலையாய் வடிய, அழுகையும் வெப்பமும் பேச நாவெழஒட்டாமல் வாயடைக்க, விம்மிவிம்மி இதென்ன அநியாயம், கொடிய அநியாயம், அசாத்தியமான விஷயமும் உன் பட்சத்தில் சாத்தியமாய்விட்டதோ! உன் விரைவுக்கு என்ன ஆச்சரியமான வல்லமை உண்டாயிருந்தது. நல்லது இன்னும் என் நம்பிக்கை அறவில்லை, உன்னை இரட்சிக்க நான் சாகக்கூடாமற்போனாலும் உனக்குப்பின் நான் உயிர்வைத்திருப்பதில்லை, உன் கூடவே வருவேன் என்றான்.

இந்தக் காட்சியையெல்லாம் கண்ணாரக்கண்ட தியோனியஸினுடைய கன்னெஞ்சு அனலில் மெழுகுபோல் உருகிப்போயிற்று அவன் கண்களிலிருந்து ஜலம் தாரைதாரையாய் ஓட, ரதத்தைவிட்டிறங்கி அவர்களிடத்திற்போய் சாகவேண்டாம், ஒப்பற்ற தோழர்களே, நீங்கள் ஒருவரும் சாகவேண்டாம். நீங்கள் இருவரும் உங்கள் நடத்தையினால் நீதியைக்குறித்தும், நீதிக்குத்தக்க பலனையளிக்கும் கடவுளைக்குறித்தும் ஆட்சேபிக்கக்கூடாத சாட்சிகொடுத்தீர்கள். ஆதலால் இணையற்ற துணைவர்களே! நீங்களிருவரும் சந்தோஷமாய் வாழ்ந்து சுகித்திருங்கள், நெடுங்கா

லம புகழ்பெற வாழ்நதிருஙகள. நான் உங்களிடத்தில ஒரு மன்றாட்டுமாததிரஞ்செயகிறேன, உஙகளுடைய நடககையினலே என மனதை மாறறினதுபோல, உங்களுடைய போதனையினலே என்னைத திருததி நானும உஙகளுககு ஒரு சிநேகிதனுகுமபடி செய்யவேணடுமெனறு வேணடிககொணடான

சிநேகிதன தன சிநேகிதனுககாக உயிரைவிடுவது அருமையல்ல; சிநேகிதனுககாக உயிரைவிடததக்க சிநேகிதனைக கண்டுபிடிபபதுதான அருமை.

பூகோளயாத்திரை.

(தொடாசசி)

உடனே மகா சுத்தவீரரான ஐரோபபியர் அறுபதுபேர் யுத்த சனனததரானாகள. சததுருககளுடைய அஸ்திரசஸ்திரப பிரயோகம செலலாதபடி தேகததில உருககுக் கவசமும, தலையில சீராவும தரிததுககொணடு புறபபட்டாாகள். ஹாபததீவாசனும தன பரிவாரஙகளுடன மாஜிலனுககு உதவியாகக கூடப புறபபட்டான, அபபொழுது மாஜிலன தன யுத்தவீரருடைய நிகரறற ஆண்மையிலும தைரியததிலும அதிக நமபிககைவைததது, அவாகளுடைய சாமாததியததுககு இணையிலலை, அவாகளைககொண்டு எந்த சததுருவையும ஜெயிககலாம, நாகரீகமறற காட்டுஜனங்கள நமககு எமமாததிரம, க்ஷணகாலததில அவாகளையெலலாம் நிர்த்தூளியாககிபபோடலாமெனறு சொலலி, ஹாபததாசனுடைய உதவியை வேணடாமெனறு தடுதது, அவனையும அவன ஜனஙகளையும கரையில நிறுததிவிட்டு, தானும தன ராணுவவீரருமாக உளநாட்டுககுள சிறிதுதூரம போனாகள. அதறகுள்ளாக அநதத தீவு ஜனஙகள ஆறுயிரமபோவரையும் திரணடு, மூனறுபஙகாகப பிரிநது, ஒருபஙகு இவாகள முன்பககததிலும், மறற இரணடும இரணடு விலாபபககததிலுமாக வநது தாககினாகள. வில்லும, வாளும, ஈட்டியும கொண்டு போர்புரிநதாாகள. வெறறி எவர பககமோ எனறு சறறுநேரம சநதேகததில இருநதது; அபபொழுது தளகாததனுகிய மாஜிலன கோபாககிரானதனாய மூர்க்கவெறிகொணடு மகா துணிகாததுடன சேனைததிரளுககுள் வெகுதூரம சென்று யுததமபண்ணினன. நஞசூட்டிய பாணம

ஒன்று தைத்ததினால் அவன் காலில் காயம்பட்டது. அவன் தலையிலிருந்த சீராவில் கல் அடிபட, அதனால் தலையிலும் ரணமுண்டாயிற்று, அப்புறம் அவனுடைய வலதுகையிலும் காயம்பட்டது. இதனால் மாஜிலன் தன் கட்கத்தைப் பிரயோகிக்கச் சக்தியற்று தரையில் விழுந்தான் உடனே ஒரு ஈட்டி அவன் நெஞ்சில் இறங்கிற்று. ஒரு கட்கம் அவன் தலையைக் கொண்டு போயிற்று இந்த ரணக்களத்தில் ஸ்பானியரில் எட்டுப்பேரும் அந்தத் தீவாரில் பதினைந்துபேரும் மடிந்தார்கள்.

ஸ்பானியருக்கு நேரிட்ட இந்த அபஜெயத்தைக் கண்ணுற்ற ஆபத்தாசன் தக்ஷணமே அவர்களைவிட்டு முன் தனக்கு எதிரியாயிருந்த மாதான் தீவாசனோடு போய்க் கூடிக்கொண்டு ஸ்பானியரை முற்றிலும் நிர்மூலமாக்குவதற்கு வேண்டிய உபாயங்களை ஆலோசித்து, கரையிலிருந்த ஸ்பானியரை சாப்பனையாய் விருந்துக்கு அழைத்து விருந்துண்கிற சமயத்தில் அவர்களை வெட்டிக் கொலைசெய்தான். சொரானோ என்று பேருள்ள ஒருவனைமாத்திரம் உயிரோடே வைத்திருந்தான் கப்பலிலிருக்கிற மற்ற ஸ்பானியருக்குக் காட்டிப் பணம்பறிக்கலாமென்று. ஸ்பானியருக்குமாத்திரம் இவன் வார்த்தையில் நம்பிக்கை இருக்குமாகில், அப்படியே இவனுக்குத் தேவையானதைக் கொடுத்து சொரானோவின் உயிரைக் காப்பாற்றியிருப்பார்களென்பதற்குச் சம்சயமில்லை. ஆனால் ஆபத்தாசனுடைய துரோகம் பட்டப்பகல் போல் வெளியாயிருந்தமையால் ஸ்பானியர் மலைந்து சொரானோவை மீட்கும்படி கரைக்குப்போனால் என்ன மோசம் சம்பவிக்குமோ என்று பயந்து க்ஷணகாலமாவது தாமதஞ்செய்யாமல் புறப்பட யத்தனித்தார்கள்.

இவர்கள் இப்படிப் புறப்பட யத்தனித்து நங்கூரம் தூக்குகிறதைக் கரையில் நின்ற சொரானோ கண்டு கலங்கி, கண்களிலிருந்து ஜலம் தாரைதாரையாய் வடிய, முழங்காலில் நின்று தன் ஜாதியாரை நோக்கி: தன்னை அந்த மிலேச்சருக்கு இரையாக விட்டுவிட்டுப் போகாதபடி கல்லான இருதயமும் கரைந்துருகத்தக்க வண்ணமாய்க் கெஞ்சி மன்றாடினான். ஆயினும் ஸ்பானியருக்குண்டாயிருந்த பயம் அந்த ஏழை மனுஷனுடைய கெஞ்சுதலைக் கேட்கவொட்டாதபடி அவர்கள் காதைச் செவிடாக்கிற்று. அப்புறம் அந்த மனுஷனுக்கு என்ன சம்பவித்ததோ இந்நாள்வரையும் தெரியாது.

மடிந்தவர்கள் போக அப்பொழுது உயிரோடிருந்தவர்களெல்லாம் நூற்றுப்பதினைந்துபேர். அவர்கள் தங்களுக்குள் இல்லாத தலைவர்களாகத் தெரிந்து நியமித்துக்கொண்டார்கள். கப்பல்கள், மெத்தச் சீர்கெட்டுப்போயிருந்தபடியால், பாகூல் என்னும் தீவில் இரண்டு கப்பல்களைக் காலிபண்ணி அவற்றிலிருந்த ஆள் சாமான் தரோபஸ்தும், மற்ற ஒரு கப்பலில் வைத்துக்கொண்டு அவைகளைச் சீர்ப்படுத்தினார்கள். இந்த யாத்திரையின் பிரதான நோக்கங்களில் ஒன்று ஐரோப்பாவிலிருந்து மலக்கா தீவுகளுக்கு மேற்றிசைவழியாய் வர்த்தகப் பாதையொன்றைக் கண்டுபிடிக்கவேண்டுமென்பது. மாஜிலன் தான் மரணமடைகிறதற்குச் சில தினங்களுக்கு முந்தி கப்பல்கள் பிலிப்பீயன் தீவுகளுக்குச் சமீபித்து வந்துவிட்டனவாகப் பல குறிப்புகளைக்கொண்டு நிச்சயித்திருந்தான். அதனால் ஸ்பானியர் அத்தீவுகளைத் தேடிக் கண்டுபிடிக்க ஒருப்பட்டார்கள்.

பாகூல்தீவு நிரக்ஷரேகைக்கு வடக்கு 570 மைல் தூரத்திலிருக்கிறது. இதிலிருந்து தென்மேற்காகப் பிரயாணம்பண்ணி சிப்பா என்னும் ஓர் தீவிற்போய்ச் சேர்ந்தார்கள். இதற்கும் ஆபத்தீவிற்கும் 150 மைல், இது நிரக்ஷரேகைக்கு 320 மைல் தூரத்திலுள்ளது. இத்தீவரசன் ஸ்பானியரைப் பட்சமாய் ஏற்றுக்கொண்டு உபசரித்தான். இவர்களைக் கண்டவுடன் அவன் தன் வலதுகையைக் குத்தி அதினின்றும் இரத்தம் வடியச்செய்து, அதைத் தன் முகம் உடம்பு நுனிநாக்கு இவைகளில் தொட்டு வைத்தான். இது அவர்களுக்குள் சமாதானக்குறியாம். ஸ்பானியரும் அந்தப்படியே செய்தார்கள்.

இவ்விடம் விட்டுப் பெயர்ந்து 120 மைல் மேற்றிசையை நோக்கிப் பிரயாணஞ்செய்து, காகேயன் என்று சொல்லப்பட்ட ஓர் பெரிய தீவைக் கண்டார்கள். இதில் குடிநெருக்கமில்லை. இங்கே குடியேறியிருக்கிற மகமதியர் பார்னியோதீவிலிருந்து வந்தவர்கள்போலிருந்தது. இவ்விடத்தில் பொன் மிகுதி.

இதைவிட்டுக் கப்பல்கள் பூவோன்தீவை அடுத்தன. அவ்விடத்து ஜனங்கள் நஞ்சூட்டிய பாணங்களைக் கையில்கொண்டு சுத்த நிர்வாணிகளாய்த் திரிந்தார்கள். குரூரமான விளையாட்டாகிய சேவல்போரில் அவர்களுக்கு மெத்தப் பிரீதி. இவர்களுக்கு விசேஷித்த பானம் நெல்லிலிருந்து வடித்த மகா வெறியுள்ள ஓர்வகைச் சாராயம்

இதைக் கடந்தபின்பு அவாகள் பானியோ தீவுவநது சேர்ந் தாாகள அதின ராஜதானி நகரமொனறில 20,000 வீடுகளவனா யும இருநதன. அங்கே மகமதிய அரசன ஒருவன வெகு சம பிரமமாய ராஜரீகஞசெய்துகொணடிருநதான. அவன மிகவும சிறபபாய அலஙகரிககபபட்ட பன்னிரணடு யானைகளை அனு பபி ஸபானியரை அழைததுவருமபடி செயது, அவாகளிடததி லிருநது அநேகம இனுமகளைத தான பெறறுககொணடு, தா னும அவாகளுககுப் பல வெகுமானஙகளைக கொடுததனுப பினுன அவ்விடததா தஙகள அரசனுககு மரியாதை செய் யுமவகை மெதத விநோதம அரசனைக கணடவுடனே இரண டுகையும தலைககுமேலெடுதது மூனறுதரம குமபிட்டு, அப புறம ஒவவொரு காலாகத தூககிககாட்டி, கடைசியில அவா கள தஙகள கைகளையே முததஞசெய்துகொளளுகிறது. இவ விடததிலும நெறசாாயம மிகுதி

இதைவிட்டு அப்புறம் சிமபூபன் என்னும தீவிறபோய், அங் கே கப்பலகளைப பழுதுபாாததுச செம்மைபபணணுமபடி நாற பதுநாள தங்கினாாகள. அததீவில ஒரு மீனுணடு, அதின் தலை பன்றிததலைபோலிருநதது, அதில கொமபும முளைததிருநதன. மேலெல்லாம ஒரே எலுமபுபோலிருந்தது, அதன் முதுகு குதி ரைசசேணத்தின வடிவமாயிருநதது.

இதிலிருந்து தென்கிழககாக யாததிரைசெய்து சோலோதா குமா எனனும தீவுசேர்நதாாகள். இததீவிலிருநதுதான கோ ழிமுடடைப பருமனுளள இரண்டு பெருமுததுக்கள பார்னி யோ அரசனுககுக கிடைததததாம்

ஸ்பானியா தஙகள ஊாவிட்டுபபுறப்பட்ட இருபத்தேழா மாதமாகிய செபடடெமபாீ 1௳ மலக்காதீவின கரையைக கண் டாாகள இததீவுகளில் ஒனறில் ஒரு மாம இருககிறது, அதன பட் டையை எடுதது ஜலததில ஊறபபோட்டால, பினபு அது படடு நூறபோல நலல நோததியான இழை இழையாய் வருமாம இ தைககொணடுதான அவவிடததுப பெணகள தஙகளுககு உடை உண்டுபணணிககொளளுகிறது

கபபலகள இவவிடமவிட்டுப பெயாநது ஜிலலோதீவின கரைபிடிததன. அங்கே மகமதியா, விககிரகாராதனைககாராகிய

இருவகைச் சமயத்தார் இருந்தார்கள். அவர்களில் விக்கிரகாராதனைக்காரர் உதயாதியில் எந்தப்பொருளை முதல்முதல் தங்கள் கண்ணுக்கு எதிரப்படுகிறதோ, அந்தப் பொருளைத் தெய்வமென்று வழிபடுகிறவர்கள். இத்தீவில் கெவுடைக்கால்லவ பருமனுள்ள ஓர்வகை நாணல் உண்டு. அதில் நல்ல மதுரமான சுத்தஜலம் நிரம்ப இருக்கிறதாம்.

நவம்பர்௴ 12௳ ஸ்பானியா அத்தீவாரோடு வர்த்தகம்பண்ணிக்கொள்ளுமபடி இடம்பெற்றார்கள். இதில் ஸ்பானியருக்கு மிகுந்த ஆதாயம் கிடைத்தது. பத்துகெஜம் சிவப்புத்துணி அல்லது பதினைந்துகெஜம் வெள்ளைத்துணிகொடுத்து, ஆயிரத்துத்தொள்ளாயிரம் பவுண் நிறையுள்ள கிராம்பு வாங்கினார்கள். அன்றியும் அப்பட்டணத்து ஜனங்கள் மிகுந்த உணவுப்பொருளும் கிறும்பு வளரும் மலையிலுள்ள சுத்தஜலமும் கொண்டு நாடோறும் கப்பலுக்கு வந்தார்கள். இந்த ஜலம் ஊற்றிலிருந்து எடுத்தவுடனே வெதுவெதென்று சூடாயிருந்து பின்பு வரவரக் குளிர்ந்துபோகுமாம் இத்தீவிலிருந்து ஸ்பானிய அரசனுக்கு ஒருவெகுமதி அனுப்பினார்கள் அதென்னவெனில், இரண்டு செத்த பட்சிகள். இவற்றை அவ்விடத்து மகமதியார் வானத்திலிருந்து இறங்கிவந்தனவென்று சொல்லித் தேவலோகபட்சியென்று பேரிட்டிருக்கிறார்கள். இது கடலீர்மை அளவு பருமனும், நீண்டமூக்கும், சின்னத்தலையும் காலும், பலவர்ணமான செகைகளும் உள்ளது. உடலெல்லாம் வெளிறின சிவப்புநிறமாயிருக்கும் இந்த ஜாதிப்பறவைகள் காற்றுவாக்கிலே கொஞ்சம் பறக்கிறதேயொழிய மற்றபடி சாதாரணமாய்ப் பறக்கிறதில்லை. இத்தத்தீவு மெத்தச் செழிப்புள்ளது, ஆடு கோழி முதலிய பல ஜெந்துக்களும், கருமபு, கிறும்பு, இஞ்சி, நெல், வாதுமை, மாதுளை முதலிய பல பதார்த்தங்களும் மிகுதியாயுண்டு. இங்கே எறும்பிலும் சிறிதான ஈக்களினால் ஓர்வகைத் தேனுண்டாகிறது. ஸ்பானியா இத்தீவைவிட்டுப் புறப்படும்போது அடுத்த தீவுகளிலுள்ள அரசர்கள் பலர் தங்கள்தங்கள் நாவாய்களிலேறி மோ என்னும் தீவுவரையும் கூடவந்து வழி அனுப்பினார்கள். கப்பல்களில் ஒன்று மெத்தப் பழுதாயப்போய்விட்டபடியால் அதைச் செம்மைப்படுத்துமபடி விட்டுவந்த இடத்தில் போர்த்துக்கீஸர் வந்து பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள்.

கடைசியில் விற்றோரியா என்னும் கப்பல்மாத்திரம் நிலைத்தது; அதில் நாற்பத்தாறு ஸ்பானியா, பதின்மூன்று இந்தியா ஆக ஐம்பத்தொன்பதுபேர் ஐரோப்பாவை நோக்கிப் பாய்விரித்தோடினார்கள். பார்னியோதீவில் செபத்தியான் என்னும் ஒருவனைத் தங்களுக்குத் தளகர்த்தனாகத் தெரிந்துகொண்டார்கள். அவர்கள் அம்பாயனு, பாந்தா, சமுத்திரா முதலான தீவுகளைக்கடந்து, வழியில் போர்த்துக்கீஸரால் தங்களுக்குச் சங்கடமுண்டாகாதபடி ஒதுங்கிப்போனார்கள்.

நிரக்ஷரேகைக்குத் தெற்கு நானூற்றெண்பதுமைல் தூரத்திலுள்ள மாலூவாத்தீவில் கப்பலைப் பழுதுபார்க்கும்படி பதினைந்து நாள்மட்டும் நின்றார்கள். அவ்விடத்து மனிதர் நரமாம்சபட்சணிகள். அது தாண்டி இலவங்கமரம் விஸ்தீரணமாய் வளர்ந்திருக்கின்ற இயூத்தீவையுங்கடந்து ஆப்பிரிக்காக்கண்டத்துக்குச் சமீபமானார்கள்.

அங்கே நன்னம்பிக்கையென்னும் முனையை அபாயமின்றிக் கடக்கும்படி நிரக்ஷரேகைக்குத் தெற்கு 42 பாகை விலகியோடினார்கள். இங்கே காற்றுச் சீராய் அடியாதபடியால் அதற்காக ஏழுவாரம் காத்திருக்கும்படி நேரிட்டது. நன்னம்பிக்கைமுனையைக் கடந்து செல்லுகையில் கப்பலாட்கள் பசியினாலும் வியாதியினாலும் மெத்த அவதிப்பட்டார்கள். அதனால் அவர்களில் அநேகர் ஆப்பிரிக்காக்கண்டத்திலுள்ள ஓர் துறைமுகத்தில் இறங்கி சிலநாள் நின்று புறப்படுவது நல்லது என்றார்கள். ஆயினும் அங்கே இறங்கினால் போர்த்துக்கீஸரால் தங்கள் பிராணனுக்குச் சேதம் நேரிடுமென்று அச்சமுண்டானபடியால், நேரே ஐரோப்பாவிற்குப் போய்விடுவதுதான் உத்தமமென்று நிச்சயித்து, 1522-ம் ௵ ஜூலை௴ 1௳ வடமேற்காகக் கப்பலை நடத்தினார்கள். இந்தப்பிரகாரம் இரண்டு மாசக்காலம் யாதொரு துறைமுகத்திலும் நில்லாமல் யாத்திரைசெய்கையில் அவர்களில் இருபத்தொருபேர் இறந்துபோனார்கள். உயிரோடிருந்த மற்றவர்களும் பட்டினியினாலும் பசியினாலும் துரும்பாய் மெலிந்து சாகிற தறுவாயில் வந்துவிட்டார்கள்.

இந்த ஸ்திதியோடே சென்று ஜேகோ என்னும் தீவுவந்து சேர்ந்தார்கள். இத்தீவில்தான் முதலாவது அவர்கள் தங்களுடைய கணக்குக்கும் அந்த ஜனங்களுடைய பஞ்சாங்கத்துக்கும் ஒரு

முழுநாள் வித்தியாசப்படுகிறதாகக் கண்டுபிடித்தார்கள். இங்குள்ள போர்த்துக்கீஸர் முதலில் இவர்களுக்குக் கொஞ்சம் தயைகாண்பித்தும், பின்பு சீக்கிரத்தில் இவர்களில் பதின்மூன்றுபேரைப் பிடித்துச் சிறையிலேபோட்டார்கள். அதனால் தளகர்த்தனாகிய ஜெபத்தியான் மீந்த இருபதுபேருடனாவது உயிர்தப்பியோடும்படி யத்தனித்தான். காற்று சீராயிருந்தபடியால் பாய்களையெல்லாம் விரித்துக்கட்டி வெகு துரிதமாய்க் கப்பலையோட்டினார்கள். செப்டெம்பர் 4௳ சென்ற வின்சென்ற என்னும் முனையைக் கண்ணிறக்கண்டவுடனே களிப்புண்டாயிற்று. 7௳ சென்றவுடனே போய்ச் சேருமுன் நாலுபேர் தொலைந்துபோனார்கள். இருநூற்று முப்பத்தேழுபேர் புறப்பட்டதற்குக் கடைசியில் பதினெட்டுப்பேர்மாத்திரம் பிழைத்து வந்து சேர்ந்தார்கள். சேர்ந்தவுடனே தாங்கள் கருதியகருமம் கைகூடினதற்காகக் கடவுட் பிரார்த்தனை செய்தார்கள். அவர்கள் பிரயாணஞ்செய்துவந்த தூரம் நாற்பத்தீராயிரம் மைல். காலம், பதினாலு நாட்குறைய மூன்றுவருஷம். இதில் நிரக்ஷரேகையை ஆறுவிசை கடந்து சென்றிருக்கிறார்கள்

ஸ்பானிய சக்கிரவர்த்தியாகிய ௫-வது சார்ல்ஸ் இவர்களையும் இவர்கள் கொண்டுவந்த ஆள்கள் பொருள்கள் இனங்கள் எல்லாவற்றையும் கண்டு மிகுந்த ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைந்தான். வழியில் நேரிட்ட ஆபத்துகளும், நடந்த விர்த்தாந்தங்களும் எல்லாம் கேட்டு, அந்த யாத்திரையில் உயிரோடே தப்பிவந்த சகலருக்கும் சிறந்த வெகுமானங்களும், உயர்ந்த பட்டங்களும் அளித்து, அவர்களை மேன்மைப்படுத்தினதுமன்றி, அவர்கள் கப்பலில் கொண்டுவந்த விலையுயர்ந்த சகல பொருள்களையும் சாமான்களையும் அவர்களுக்கே பகிர்ந்து கொடுத்துவிட்டான். தளகர்த்தனாகிய ஜெபத்தியானுக்குப் பிரபுபட்டமும், வருஷாந்த உம்பளமாகப் பெருந்தொகையான பணமும் கிடைத்தன. அன்றியும் அரசன் பூகோளவடிவமாக ஒன்றுசெய்து அதன்மேல் நீதான் என்னை முதலாவது சுற்றிவந்தவன் என்று எழுதி, அந்த விருதை அவனுடைய கையில் தரித்துக்கொள்ளும்படி கட்டளையிட்டான். ஜனங்களெல்லாம் ஜெபத்தியானையும் அவன் கூட்டாளிகளையும் மிகவும் கனம்பண்ணினார்கள். பூமியைப் பிரதட்சணம் செய்துவந்த விற்றோரியா என்னும் அந்தக் கப்பலானது புல

வர்கள் கற்பனுலங்காரத்துடன் கவிபாடுவதற்கும், வித்வான்கள் காவியங்களும் கதைகளும் கட்டுவதற்கும் நல்ல ஏதுவானதுமன்றி, யாவருக்கும் மிகுந்த அதிசயத்தையும் வியப்பையும் விளைத்து நெடுங்காலம் நின்றது.

மிருகங்களாய்க் கூடித் தங்களுக்கு ஓர் அரசனை நியமிக்கப் பார்த்தது

ஒரு வனத்தில் நெடுங்காலம் விலங்குகளுக்கெல்லாம் அரசனாயிருந்து ராஜரீகம் செய்துகொண்டுவந்த சிம்மமானது மரித்துப்போக, அதன் உயிர்க்கு உயிராயிருந்த பெண்சிங்கம் துக்கித்து, ஆரணியமெல்லாம் அதிரும்படி இடிமுழங்கினதுபோலப் பெருஞ்சத்தமிட்டுப் புலம்பி அழுதது. அதுகேட்டு அக்காட்டிலுள்ள மிருகங்களெல்லாம் திரண்டு, காலஞ்சென்றுபோன தங்கள் அரசனுக்காகத் துக்கங்கொண்டாடவும், பெண்சிங்கத்தினிடம் துஷ்டிவிசாரித்து அதை ஆறுதல்படுத்தவும் என்று வந்தன. வந்தகாரியம் முடிந்தபின்பு அவைகளெல்லாம் ஓரிடத்திற்கூடி, சிம்மாசனம் பாழாய்க்கிடக்கிறதே, இனி யாரை நமக்கு அரசனாகத் தெரிந்து நியமிக்கிறது என்று ஆலோசனை செய்யத்தொடங்கின.

அப்பொழுது ஒவ்வொன்றும் தனதன் திறமையையும் பாத்தியதையையும் எடுத்துக்கூட்டித் தனக்குத்தான் ராஜபட்டம் கிடைக்கவேண்டுமென்பதுபோல மனுப்பண்ணிக்கொண்டது. சிவிங்கியானது முந்திவந்து, ஓ மிருகசங்கமே! எந்த மிருகத்தைப்பார்க்கிலும் நான்தான் சிம்மத்துக்கு மிகவும் ஒத்துவரத்தக்கவன், என்னைப்பார்த்தால் அதைப் பார்க்கவேண்டாம். ஆதலால் என்னை உங்களுக்கு அரசனாக நியமியுங்கள் என்று சொல்லிற்று. அது சொல்லிமுடியுமுன் கரடியானது ஊடேவந்து, ஓ விலங்கினமே! முன்னமே நீங்கள் என்னைவிடச் சிம்மத்தைத் தெரிந்துகொண்டது பெரிய அநியாயம். சௌரியத்திலும், தைரியத்திலும் நான் சிம்மத்துக்குத் தாழ்ந்தவன் அல்ல. குரூரதுஷ்டக்கிரத்தியங்களில் வந்தாலோ நான் அதற்குப் பதின்மடங்கு அதிகம். அல்லாமலும் அதற்கு மரம் ஏறத் தெரியாது, நானோ எப்படிப்பட்ட மரத்திலும் ஏறிவிடுவேன். ஆதலால் என் தலை

யில ராஜகிரீடம தரிககவேணடியது *எவவிததத்திலும நியாயமே எனறு விவகரிததது அபபொழுது யானையானது, விவேகிகளே! எனனைபபோல மேன்மையும பலமும அமைதலுமுளள அரசன எங்கேயாவது உண்டோ எனறு நீஙகளே நிதானிததுபபாருங கள எனறது. உடனே அஸ்வமானது ஓடிவநது, சிருஷ்டிபபில எல்லாம என்னைபபோல அழகும சிறபபுமுளள ராஜா உஙக ளுக்கு எஙகேபோனாலும கிடையாது எனறு கூபபிடடது. அதைப பேசவொட்டாமல நரியானது குறுககே வநது, மகா பிர புககளே! ராஜரீகததுககு வேணடியது அழகோ, சாமபேததான தண்டஙகளாகிய உபாயதநதிரஙகளோ, நீஙகளே யோசிததுக கொளளுஙகள. தநதிரததில எனக்கு மிஞசினவா இவவுலகில் இலலை எனறு கூவினது. சுறுசுறுபபிலும விரைவிலும எவரும் எனககு நிகரிலலையெனறு மான முறையிடடது அபபொழுது வானரமானது ஓா குதியில வநது நிலலெனறு மானை அமாததி விட்டுக் கூடடததைபபாாததுு, எனனைபபோல குடிபொருநதிய அரசன் உஙகளுககு எங்கே கிடைக்கும? ராஜன எனறால அர்தத மென்ன? பிரஜைகளுககு இஙகிதம செயகிறவன எனது கோலின கீழ் அமையும குடிகளுககு நான நாடோறும மகிழசசியுண டாககி இனபததை வருவிகக வலலவன். அதுமாததிரமலல, சகல சிருஷ்டிபபுக்கும மேலான ஆண்டவன் மனுஷன: நான அநத மனுஷசாயலாயிருககிறேன். ஆதலால் நானே உஙகளுககு ராஜ னாகத தகுநதவன் எனறு சாதிததது. அதுகேடடு அஙகு வநதி ருநத கிளியானது, சீசீ, குரஙகே, நீயாவது மனுஷனுககு ஒப பாகிறதாவது? உன அவலடசணமான மூஞசிககும மனுஷனு டைய சௌநதரியமான வதனததுககும எவவளவு விததியாசம. அருவருப்பும அசஙகியமுமான உனனிடம காணபபடுகிற மனுஷ சாயலெலலாம சிரிபபுக்குப பாததிரமானவைகளேயொழிய் வே றென்னததுக்கு உதவும. கேவலம நீ மனுஷனுககு ஒபபெனறு கூறககூடுமானால நான் எவவளவு அதிகமெனறு பாா. மறற ஜெநதுககளெலலாவறறையுமவிட மனுஷனுககு விசேஷமென்ன? யுகதியென்னும காரணததை வெளிபபடுததுகினற அவனுடைய பேசசலலவா? அல்லது, மனுஷன பேசுகிறதுபோல எனககுப் பேசத்தெரியும எனறு சொலலுமுனனே குரஙகானது மூடுமூடு, வாயைமூடு, அலபபாதே, நீ பேசுகிறது மெய்தான. ஆனால்

மனுஷனைப்போலல்ல, சொன்னதைச்சொல்லும் கிளிப்பிள்ளையென்று எவரும் இகழ்த்தக்கவிதமாய்ச் சொல்லின பொருளை அறியாமல் சொன்னதை மாறிமாறிச் சொல்ல அறிவாயேயன்றி, வேறென்ன தெரியும் என்றது.

இந்தச் சம்பாஷணையைக் கேட்டவுடனே கூட்டமுழுமையும் கொல்ல என்று சிரித்தது. அச்சமையத்தில் இறந்துபோன சிங்கத்தின் குட்டியாகிய பாலசிங்கம் எழும்பி அந்தக் கூட்டத்தை நோக்கி சற்றுப் பொறுத்திருங்கள், நான் வளரட்டும், அப்பொழுது உங்களை ஆளத்தக்க பராக்கிரமசாலி இன்னானென்றும், நீங்களெல்லாம் யாருக்குப் பயந்து அடங்கவேண்டுமென்றும் உங்களுக்கு உணர்த்துவேன். அதுமட்டும் நான் என் பிதாவினுடைய வீரசூரபராக்கிரமங்களைக் கற்று அவரை மிஞ்சத்தக்க மேன்மையுடையவனாகவரப் பிரயாசப்படுவேன். இப்பொழுது நீங்களெல்லாரும் அவரவர் ஸ்தானத்துக்குப் போங்கள் என்றது.

அதுகேட்டு மிருகங்களெல்லாம் தனக்கில்லாததை உள்ளது போலக் காட்டி, போலிவேடம் பூண்டு நடிக்கிறதொன்றும் நமக்கு ஆபத்துவேளைக்குதவாது. ஆதலால் நம்முடைய ராஜகுமாரனாகிய பாலசிங்கம் வளருமவரையும் காத்திருப்பதே புத்தியென்று சொல்லி எல்லாம் அதனதன் பாட்டுக்கு இரைதேடப் போய்விட்டன.

பழமொழிகள்

ஒருவன் பிறந்தாற் றனிமை, இருவர் பிறந்தாற் பகை.
ஒரு கோபம்வந்து கிணற்றில் விழுந்தால், ஆயிரஞ் சந்தோஷம் வந்தாலும் எழும்பலாமா?
கந்தையானாலுங் கசக்கியுடுத்து.
கற்றது கையளவு கல்லா துலகளவு.
கறுப்பு வெளுப்பாகாது, கசப்பினிப்பாகாது.
கருமத்தை முடிக்கிறவர் கடலையாராயார்
கள்ளமனந் துள்ளும்.
கீட்டாப் பின்வாங்கிறது பாச்சலுக்கடையாளம்.
கம்பத்திலேறிக் கரணம்போட்டாலும் கீழே இறங்கிக் கையேற்க வேண்டும்

ஆவா அரசனின் அரண்மனை.

ஆவா அரசனின் அரண்மனைக்கு நான்கு வாசல்களுண்டு. ஒன்றுக்கு சொர்ணவாசலென்றுபேர், இதின்வழியாய்த் துரைத்தனத்தைச் சேர்ந்த ஸ்தானாதிபதிகள் பிரபுக்கள் முதலியவர்கள் மாத்திரம் வரலாம். இரண்டாம் வாசலுக்கு நீதிவாசலென்று பேர், இதின்வழியாய் நியாயம்கிடைக்கும்பொருட்டுப் பிரியாதுகள் வழக்குகளைக் கொண்டுவருகிற பிரஜைகள்மாத்திரம் வரலாம். மூன்றாம் வாசலுக்குக் கிருபைவாசலென்றுபேர், இதின்வழியாய்க் குற்றஞ்சாட்டப்பட்டதிலிருந்து விடுதலையானவர்களும், ராஜனிடத்திலிருந்து தயவுகளைப் பெற்றவர்களும் வெளியே போகலாம். நான்காம் வாசலுக்கு ராஜவாசலென்றுபேர், இதின்வழியாய் அரசன்மாத்திரம் போக்குவரவு செய்யலாம்.

சீனசக்கரவர்த்தியின் விளம்பரம்.

சீனசக்கரவர்த்தி போஜனஞ்செய்து முடித்தவுடனே அவர் தமது கட்டியக்காரனைக்கொண்டு செய்யும் விளம்பரமென்னவென்றால் ராஜாதி ராஜாக்களுக்கும் மேலான ராஜனாகிய சீனசக்கரவர்த்தி போஜனஞ்செய்தாயிற்றாகையால், இனி உலகத்திலுள்ள ராஜாக்கள், பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர் யாவரும் போஜனஞ்செய்யப்போகலாம் என்பதே

சமாசார சங்கிரகம்

சென்னபட்டணத்தில் (The duke of Edinburgh) எடின்பரோ டியூக் பிரபுவின் வருகை.—இவர் சென்ற மார்ச்சு௴ உகவ பகல் உ௦ மணிக்கு, பேப்பூரிலிருந்து புகைவண்டியேறி, உஉவ செவ்வாய்க்கிழமை காலமே கூ௦—மணிக்கு சென்னபட்டணத்தில் இராயபுரம் ஸ்தானம்வந்து சேர்ந்தார். அது பலவர்ணமான பட்டாடைகளாலும், பூமாலைகளாலும் விதானஞ்செய்யப்பட்டிருந்தது. அதில் அதிகாரிகளும், ராஜாக்களும், பிரபுக்களும், பெரு

மாட்டிகளும் வந்து ராஜகுமாரனுடைய வரவுபார்த்துக் காத்து நின்றார்கள். அவர் வந்தவுடனே ஒருவருக்கொருவர் செய்ய வேண்டிய முறைமைப்படி உபசாரணை செய்து முடிந்து பட்டணப் பிரவேசமானார்கள். மெய்காவலாளரான குதிரைப் போர்வீரர் நூறுபேர் முன்னும் பின்னும் செல்ல, இரண்டு தளகர்த்தர்கள் இருமருங்கும் சூழ்ந்துவர, கவர்னருடைய சிறந்த ரதத்தினுயே ரில் ராஜகுமாரனும், நேபிய பிரபுவும் அவவிருவருடைய காரியதரிசிகளும் புறப்பட்டார்கள் அதன்பின் நேபியபெருமாட்டியும், புதுச்சேரி கவர்னரும், அப்புறம் திருவனந்தபுரம் மஹாராஜா, புதுக்கோட்டை ராஜா, கொச்சி இளையராஜா முதலிய பல ராஜாக்களும், பெரிய துரைமார்களும், ஜமீந்தார்களும் முறை முறையாய்ப் பின்சென்றார்கள் தெருவிலும் வழியிலும் பல இடங்களில் உயர்ந்த பந்தல்கள்போட்டு, கமான் வளைத்து, வாழைகளநட்டு, தோரணங்கள்கட்டி, எடின்பரோ பிரபு வருக, வருக என்று எழுதி விரித்தகொடிகள் இருமருங்கும் வீச, வெகு சிறப்பாய அலங்காரஞ்செய்திருந்தது. ஜனத்திரளுக்கோ அளவுசங்கையில்லை. மன்றோ சிலைக்குச் சமீபத்தில் பெரிய கமானவளைத்து அதை மெத்தவும் சிங்காரஞ்செய்து, அவ்விடத்தில் ராணுவவீரரெல்லாம் வந்துநின்றதுமன்றி, சென்னையிலுள்ள பள்ளிக்கூடங்களிலிருந்து 9000 பிள்ளைகள்வரையும் இதற்கென்று செய்யப்பட்ட காலரியில் அமைதலாயிருந்து, ராஜகுமாரன் வந்தவுடனே ஒரு சங்கீதம்பாடி முடித்து, சந்தோஷக்குறியாக இடிமுழங்கினதுபோல ஆரப்பரித்தார்கள் ராஜபிரபு இவற்றையெல்லாம் கண்டு மகிழ்ந்து சாலமே ஏழுமணிக்கு கவர்னர் வீடுபோய்ச் சேர்ந்தார் அங்கே கொலுமண்டபத்தில் ராஜகுமாரனுடைய பேட்டிக்காக வந்திருந்த பெரிய துரைமார்கள், உத்தியோகஸ்தர்கள், சுதேசராஜாக்கள், பிரபுக்களாகிய இவர்களில் விசேஷித்தவர்களை நேபியபிரபு போய்ப்போய் ராஜகுமாரனைக் காணப்பண்ணுவித்தார். நேபியபிரபு தனிப்படவும், மற்ற ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களெல்லாரூஞ் சேர்ந்தும் கனதிரவியம் செலவுசெய்து சிறந்த விருந்துசெய்தார்கள் சுதேச கனவான்களும் சுதேச முறைமைப்படி உபசரிக்கக் கருதி, கடல் அருகான ஓர் பெரிய மைதானத்தில் எத்தேசஸ்தரும் வியந்து புகழ்த்தக்க மகா சிறப்பான பந்தல் ஒன்று செய்வித்து, அதில் பலவிநோதங்களும் வேடிக்கைகளும்

அமைத்து, அங்கே ராஜகுமாரனை அழைத்துவந்து தங்கள் ராஜபக்திவிளங்கும் உபசாரபத்திரம் எழுதி வாசித்ததுமன்றி, சதா, விருந்து, வாணவேடிக்கை முதலானதுகளுஞ்செய்து அவரைச் சந்தோஷிப்பித்தனர். இந்தப்பிரகாரம் எடின்பரோ டியூக் பிரபு சென்னையில் ஐந்துநாளிருந்து பலதரத்தாருடைய உபசாரங்களையும் மிகுந்த சந்தோஷத்துடன் அங்கீகாரம்பண்ணி, அவரவருக்குத் தகுந்த மறுமொழிகொடுத்து, 27உ காலமே கலாத்தியா என்னும் நீராவி மரக்கலமேறி இங்கிலாந்துக்குப் பிரயாணமானார். வழியில் யாதொரு மோசமும் அபாயமுமின்றி நிர்விக்கினமாய் ஊர்போய்ச்சேர்ந்து, இந்தியாவின் வளத்தையும், இந்துக்களுடைய ஸ்திதியையும்பற்றித் தாம் கண்டு கேட்டதையெல்லாம் மாட்சிமைதங்கிய நமது ராஜாத்தியவர்களுக்கு விபரமாய்த் தெரிவிப்பாரென்று கோருகிறோம்.

நாளதுவருஷம் சென்னைச் சர்வகலாசாலையில் கல்விப்பட்டம் பெற்றவர்களின் மொத்தத்தொகை எழுபத்தைந்து. அவர்களுக்குள் B. A. பட்டம் பெற்றவர்கள் முப்பத்துநாலுபேர். B. L. பதினாலுபேர். M. A பட்டம் பெற்றவர்கள் ஐந்துபேர். M. L. ஒருவர்

(The Hon'ble Mr. Sasoon) கனம்பொருந்திய சாசூன் என்று நாமமுடைய சீமான் ஒருவர் பம்பாயில் எடின்பரோ டியூக் பிரபுவின் வருகைக்கு ஞாபகக்குறியாக அந்நகரத்தில் ஒரு பெரிய பாடசாலை கட்டும்படி லட்சம் ரூபாய் கொடுத்தார்.

வட இந்தியாவிலுள்ள கொப்பத்துலாவின் ராஜா திறமையுள்ள தமது மந்திரியோடும், வேறிருபது உத்தியோகஸ்தர்களோடும் பம்பாய்த் துறைமுகத்தில் கப்பலேறி இங்கிலாந்துக்குப் போகும்படி சென்றமாசம் 15உ தமது ராஜதானியைவிட்டுப் புறப்பட்டார். அங்கிலேய தேசத்துக்குப்போய்ச் சிலமாசமிருந்து அங்குள்ள பல நூதனங்களையும், அங்கிலேய துரைத்தனத்தின் அதியச வல்லமையையும் கண்டு திரும்புவது அவருடைய உத்தேசியமாம்

ரத்நம்—"இதென்ன கேள்வி! அது எனக்குத் தெரியாதோ? என் இரும்புவளையத்தை உருண்டு ஓடும்படி செய்கிறது என் கையிலிருக்கிற இந்தக் கோலைத்தவிர வேறென்ன? நான் இக்கோலைக்கொண்டு வளையத்தை எவ்வளவுக்குப் பலமாய் அடிக்கிறேனோ, அவ்வளவுக்கு வளையம் விரைவாய் உருண்டு ஓடுகின்றதே" என்றான்.

சுந்தரம்—"அப்படியானால் அதோ நிற்கிற தூணை உன் கோலினால் உனக்கு இஷ்டமான அளவு பலமாய் அடி, தூண் இப்பொழுது நிற்கும் இடத்தைவிட்டு எள்ளளவேனும் அசைகிறதாவென்று பார்ப்போம்" என்றான்.

ரத்நம்—"நிஜந்தான், அது கொஞ்சமேனும் அசையமாட்டாது. அது என்னத்தினாலென்றால், அந்தத் தூண் பூமியில் ஆழமாய்ப் பதிந்திருக்கின்றதே, நான் அதை எவ்விதமாய் அடித்தபோதிலும் அது எப்படி அசையும்" என்றான்.

சுந்தரம்—"அப்படியா? நல்லது, அதோ ரஸ்தா ஓரத்தில் கீழே கிடக்கிற தூணைப்பார். அது பூமியில் பதிந்திருக்கவில்லையே, உனக்கு இஷ்டமானபிரகாரம் உன் கோலினால் அதை அடி, அது உன் இரும்புவளையத்தைப்போல் உருண்டு ஓடுகிறதாவென்று பார்ப்போம்" என்றான்.

ரத்நம்—"அது ஒருக்காலும் ஓடமாட்டாதென்று எனக்கு நன்றாய்த் தெரியும். அது மிகவும் கனமுள்ள பொருளாயிற்றே, அதை என் கோலினால் அடிக்கிறதினால் என்ன பிரயோஜனம்?" என்றான்.

சுந்தரம்—"அப்படியானால், இதோ என் கைக்குட்டையை உன் கையில் கொடுக்கிறேன், அதை உன் கோலினால் அடித்து உருண்டோடும்படி செய் பார்ப்போம். இந்தக் கைக்குட்டை கனமுள்ள பொருளென்று சொல்ல இடமில்லையே?" என்றான்.

ரத்நம்—"இல்லை, ஆனால் அது மிகவும் இலேசான பொருளானதால் அது உருண்டோட இடமில்லை" என்றான்.

சுந்தரம்—"ரத்நம்! நீ கெட்டிக்காரன்தான், தூணைக் கனமுள்ளதென்று தள்ளிவிட்டாய், கைக்குட்டை இலேசானதானதால் உதவாதென்கிறாய், இனி என்னசெய்யலாம்? உன்னைத் திருப்திசெய்கிறது வருத்தமான காரியம்போல் தோன்றுகிறதே.

நல்லது, நான் இந்தக் கைக்குட்டையில் சிறு கறைகளைப்போட்டு உன் மனசின்படி அதைக் கண்முள்ளதாக்குகிறேன், அப்பால் நீ அதை உருண்டோடும்படி செய்வாயா?" என்றான்.

ரதநம்—"இல்லை, அப்படிச்செய்ய என்னால் கூடாது" என்றான்

சுந்தரம்—"ஏன் அப்படிச்செய்ய உன்னால் கூடாது?" என்றான்

ரதநம்—"ஏனென்றால் அது உருண்டோடமாட்டாது" என்றான்

சுந்தரம் — "அது ஏன் உருண்டோடமாட்டாது, அதின் காரணத்தைத்தான் நான் உன்னிடத்தில் கேட்கிறேன், நீ அதை எனக்குச் சொல்லக்கூடுமா?" என்றான்

ரதநம்— "அது எனக்குத் தெரியவில்லை, இதைப்பற்றி நான் ஒருக்காலும் யோசித்ததேயில்லை" என்றான்.

சுந்தரம் —"ரதநம்! நீ சொன்னது நிஜந்தான். சாதாரணமாய்ச் சிறுவர்கள் தங்கள் விளையாட்டைத்தவிர மற்றொன்றையும்பற்றி யோசிக்கிறதேயில்லை. நல்லது, உன்னிடத்தில் நான் பேசவேண்டுமென்ற காரியத்தை இப்பொழுது சொல்லட்டுமா?" என்றான்.

ரதநம்—"நல்லது, சீக்கிரம் சொல்லு, நான் என் வளையத்தை உருட்டிக்கொண்டு விரைவாய் ஓடவேண்டும். அடுத்த தெருவிலுள்ள என் சிநேகிதனாகிய பூஷணத்தைக் கூப்பிடப் போகிறேன். அவனும் ஒரு இரும்புவளையத்தை உருட்டிக்கொண்டு வரப்போகிறான். என்னுடைய வளையம் அவனுடைய திலும் சிறுதென்றாலும், என் வளையம் அவனுடையதைப்பார்க்கிலும் விரைவாய் ஓடும்படி செய்யப்போகிறேன். நல்லது, சுந்தரம்! நீ என்னிடத்தில் சொல்ல விரும்புகிற காரியமென்ன?" என்றான்.

சுந்தரம் — "யோசிக்கக் கற்றுக்கொள்ளுதலைப் பற்றித்தான் உன்னிடத்தில் பேசவிரும்புகிறேன்" என்றான்

ரதநம்—"இதென்ன! யோசிக்கக் கற்றுக்கொள்ளுதலென்றாலென்ன? நான் இதுவரையிலும் இதைக் கேட்டதில்லையே" என்றான்.

சுந்தரம்—"கொஞ்சக்காலத்திற்கு முன்வரையில் எனக்கும் அதைப்பற்றி ஒன்றுந்தெரியாது, இப்பொழுது அதின் பிரயோ

ஜனத்தைக் கொஞ்சம் அறிந்திருக்கிறபடியால் என் சிறுவயதிலே
யே யோசிக்கக் கற்றுக்கொள்ள ஆரம்பிக்க இடமில்லாமற்போய்
விட்டதேயென்று துக்கப்படுகிறேன்" என்றான்.

ரத்நம்—"அப்படியானால் யோசிக்கக் கற்றுக்கொள்ளுகிறதி
னால் என்ன பிரயோஜனம்? எனக்கு அதைச் சொல்லு" என்றான்

சுந்தரம்—"என்ன பிரயோஜனம் என்று சொல்லுகிறாய்? இது
ஆச்சரியமான கேள்விதான் ஆகிலும் முன் ஒருகாலத்தில் நா
னும் இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்கத்தக்க நிலைமையிலிருந்
தபடியால், நீ இப்பொழுது கேட்கிற கேள்வியினிமித்தம் நான்
ஆச்சரியப்படக்கூடாது. யோசிக்கக் கற்றுக்கொள்ளுகிறதினால்
எண்ணிறந்த நன்மைகளுண்டாகும் ஜனங்கள் பொருள்களைக்
கவனித்து, அவற்றைப்பற்றி நன்றாய் யோசிக்கவில்லையென்றால்
நமக்குப் பெரிய கஷ்டங்களுண்டாகும் நாம் சாப்பிடுகிற போ
ஜனங்கள், நாம் உடுத்துகிற நானாவித உடைகள், நாம் வாசம்
பண்ணும் பிரயோஜனமும் அலங்காரமுமான வீடுகள், வீடுகளுக்
குள்ளிருக்கிற உபயோகமும் விசித்திரமுமான சாமான்கள் இவை
முதலிய எண்ணிறந்த காரியங்களெல்லாம் புத்தியுள்ள ஜனங்க
ளின் விவேகமான யோசனைகளின் மூலமாயத்தான் உண்டாயிருக்
கின்றன அல்லது, நான் சில கேள்விகளை உன்னிடத்தில் கேட்கி
றேன் அவற்றிற்கு மறுமொழிசொல்லு பார்ப்போம். என
னத்தினால் சிறுவர்களின் பம்பரம் சுற்றி ஆடுகின்றது? பந்தைத்
தரையின்பேரில் அடிக்கும்பொழுது அதேன் வி யாய் எழும்
புகின்றது? காற்றாடி (பட்டம்) ஆகாயத்தில் உயர்ந்து பறப்பதற்
குக் காரணமென்ன? இக்கேள்விகளில் ஒன்றுக்காவது நீ சரியான
மறுமொழி கொடுக்கக்கூடுமென்று நான் நினைக்கவில்லை ஆனால்
நீ யோசிக்கக் கற்றிருந்தாயானால் அவையெல்லாவற்றிற்கும் உட
னே சரியான மறுமொழிகளைச் சொல்லமாட்டுவாய்" என்றான்.

ரத்நம்—"அப்படியா? நான் யோசிக்கக் கற்றுக்கொண்டால்
இவையெல்லாவற்றிற்கும் முகாந்தரஞ்சொல்ல எனக்கு சக்தி
யுண்டாகுமா?" என்றான்

சுந்தரம்—"ஆம், சந்தேகமன்னியில் அப்படியாகும். நல்லது
ஒரு முறமானது காற்றாடியைப்போலக் காற்றில் உயர்ந்து பறப்
பதற்கு ஏன் கூடவில்லையென்று உனக்குத் தெரியுமா? என்றான்.

ரத்நம்—"முறமானது அதிக கனமுள்ளதாகையால் அது ஆகாயத்தில் பறக்கிறதற்கு ஏதுவில்லை" என்றான்.

சுந்தரம்—"முறமானது அவ்வளவு கனமுள்ள பொருளா? ஒரு பெரிய காற்றாடியானது இரண்டு மூன்று முறங்களைப்பார்க்கிலும் அதிக கனமுள்ளதாயிருக்குமே, ஆகையால் நீ கொடுத்த முகாந்தரம் சரியானதாயிருக்குமா?" என்றான்.

ரத்நம்—"அதை யோசித்துச் சொல்லுகிறதற்கு எனக்குத் தெரியவில்லை" என்றான்.

சுந்தரம்—"ஆகையினால்தான் நீ உடனே யோசிக்கக் கற்றுக்கொள்ள ஆரம்பிக்கவேண்டுமென்று விரும்புகிறேன். நல்லது அதோ காற்றாடியைப் பறக்கவிட்டுக்கொண்டு நிற்கிற சிறுவன் தன் கையிலுள்ள கயிற்றையெல்லாம் விட்டும், காற்றாடியானது நேரே அதிக உயரமாய் எழும்பாமல் தாழ்ந்துநிற்பதற்குக் காரணமென்னவென்று யோசித்துச்சொல்லு பார்ப்போம்?" என்றான்

ரத்நம்—"அது ஏனென்றால், அந்தச் சிறுவன் கையிலுள்ள கயிறு காற்றாடியைப் பிடித்திருக்கிறபடியால் அது காற்றாடியை அதிக உயரமாய் எழும்பாதபடி தடைசெய்கின்றது" என்றான்.

சுந்தரம்—"ரத்நம்! நீ சொல்லுகிற முகாந்தரம் சரியானால் கயிறு அறுந்துபோகும்பொழுது காற்றாடி அதிக உயரமாய் எழும்புவதற்குப் பதிலாக உடனே கீழேவந்து விழுவானேன்?" என்றான்.

ரத்நம்—"நிச்சயமாய் எனக்கு இந்தக் காரியம் விளங்கவேயில்லை, அதின் சரியான முகாந்தரத்தை நீ சொல்லக்கூடுமோ?" என்றான்.

சுந்தரம்—"ஆம், நான் அதைச் சொல்லக்கூடும், மேலும் முன் எனக்குத் தெரியாத அநேககாரியங்கள் இப்பொழுது எனக்குத் தெரிந்திருக்கின்றன. நீயும் யோசிக்கக் கற்றுக்கொள்வாயாகில் இப்பொழுது கிரகித்துக்கொள்வதற்கு வருத்தமாய்த் தோன்றுகிற காரியங்கள் சீக்கிரம் லகுவானவைகளாய்ப் போகுமென்பதற்குச் சந்தேகமில்லை. யோசனையுள்ள ஜனங்கள் மற்ற ஜனங்களைப்பார்க்கிலும் அநேக சிலாக்கியங்களையுடையவர்கள். அவர்கள் மற்றவர்களுக்கு நல்ல புத்திமதிகளைச் சொல்லவும், உதவிகளைச் செய்யவும்தக்க சக்தியுள்ளவர்களாயிருக்கிறார்கள். விசேஷ

மாய் அவர்களுக்குத்தான் காரியங்களை அநுகூலமாய்ச் செய்துமுடிப்பதற்கு ஏற்றவிதமும் நேரமும் தெரியும். நல்லது ஓர் பெரிய நெல் சாக்கில், எத்தனை நெல்மணிகளிருக்கின்றனவென்று கண்டுபிடிக்கவேண்டுமென்றால், நீ அதை எப்படிக் கண்டுபிடிப்பாயென்று எனக்குச் சொல்லு பார்ப்போம்?" என்றான்.

ரத்நம்—"இது தெரியாதா? சாக்கிலுள்ள நெல்மணிகளையெல்லாம் ஒவ்வொன்றாக எண்ணி, கடைசியில் மொத்தத்தொகையைக் கண்டுபிடிப்பேன்" என்றான்.

சுந்தரம்—"அதுவும் ஒரு வழிதான், ஆனால் விவேகமும் யோசனையுமுள்ள ஒரு மனுஷன் செல்லும் வழி அதுவல்ல. ஏனெனில் நீ ஒரு நிமிஷத்தில் இருநூறு நெல்மணிகள் வீதம் எண்ணக்கூடுமென்றாலும், இவ்விதமாய் நீ இராவும்பகலும் இடைவிடாது எண்ணிக்கொண்டிருந்தாலும் சாக்கிலுள்ள மணிகளையெல்லாம் எண்ணிமுடிக்குமுன் அநேக நாட்கள் கடந்துபோமென்பதற்குச் சந்தேகமில்லை" என்றான்.

ரத்நம்—"அப்படியானால் நீ அதை எப்படிக் கண்டுபிடிப்பாய்? நெல்மணிகளை எண்ணாமல் அவற்றின் தொகையைக் கண்டுபிடிக்கலாமென்பது எனக்குப் பிரமிப்பாயிருக்கிறதே" என்றான்.

சுந்தரம்—"அது எப்படியென்றால், யோசனையுள்ளவன் முதலாவது சாக்கிலுள்ள நெல்லில் ஒரு பலம் நெல்லை நிறுத்து வேறாக வைத்துக்கொண்டு, அவ்வொருபல நெல்லில் எத்தனை மணிகளிருக்கின்றனவென்று எண்ணிக் கண்டுபிடிப்பான். பின்பு சாக்கிலுள்ள நெல் முழுமையையும் நிறுத்து அது எத்தனைபலம் நிறையுள்ளதென்று அறிந்துகொள்வான். அதன்பின் ஒருபல நெல்மணிகளின் தொகையை நெல் முழுமையின் நிறையோடு பெருக்குகிறதினால் சாக்கு முழுவதிலுமுள்ள நெல்மணிகளின் மொத்தத்தொகையைக் கண்டுபிடிப்பான். நல்ல கிராசுமாத்திரம் சமீபத்திலிருக்குமானால் காலமணி நேரத்திற்குள்ளாக சாக்கு முழுமையிலுமுள்ள நெல்மணிகளின் தொகையைக் கண்டுபிடித்துவிடலாம்" என்றான்.

ரத்நம்—"இது மிகவும் உபாயமான வகையாயிருக்கிறதே; நீ எனக்கு அதைச் சொல்லாவிட்டால் அது ஒருக்காலும் எனக்குத் தெரியமாட்டாது" என்றான்.

சுந்தரம்—"ஏதாம் இந்த உபாயமான வகை யோசனையின் பேரில் கண்டுபிடிக்கப்பட்டதேதவிர வேறல்ல. கொஞ்சக்காலத்திற்குமுன் யோசனையற்ற அவிவேகியான ஒரு மனுஷனைப்பற்றி வேடிக்கையான ஒரு சங்கதியைக் கேள்விப்பட்டேன். அது என்னவெனில் அம்மனுஷன் வாசம்பண்ணின சிறுகுடிசையானது பழமையாகி அதின் கூரையின்பேரில் மண்நிறைந்தபடியால், அதின் உச்சியில் கொஞ்சம் புல்முளைத்தது. அதை அவன் கண்டு சமீபத்தில் கட்டியிருந்த ஒரு பசுவை அவிழ்த்துவந்து, அப்பசு அக்கூரையின்பேரில் ஏறிப் புல்லை மேயும்படி வேண்டிய பிரயத்தனமெல்லாம் செய்துபார்த்தான்" என்றான்

ரத்நம்—"கடைசியில் அவன் எப்படித் தன் நோக்கத்தை நிறைவேற்றினான்?" என்றான்.

சுந்தரம்—"யோசனையற்ற அம்மனுஷன் செய்த புத்தியீன பிரயத்தனங்களினால் பசுவானது கூரையின்பேரில் ஏறி, புல்லைமேய ஏதுவில்லாமல் போய்விட்டதின்பேரில் அவன் ஒன்றுஞ்செய்யத் தெரியாமல் விழித்துக்கொண்டிருக்கையில், விவேகியும் யோசனையுள்ளவனுமாகிய அடுத்த வீட்டுக்காரன் தன் அயலானுடைய புத்தியீன பிரயத்தனங்களைப்பார்த்து மிகவும் சிரித்துவிட்டு அவனைநோக்கி 'ஓ மனுஷனே' உன் கூரையின்பேரில் பசு ஏறிப் புல்லைமேய ஏதுவில்லாவிட்டாலும், நீ எட்டி அப்புல்லை அறுத்துப் பசுவுக்குப் போடுவது மிகவும் இலேசான காரியமாயிற்றே" என்று சொன்னபின்பு, தானே ஒரு நிமிஷத்தில் அப்புல்லை அறுத்துப் பசுவண்டை போட்டான்" என்றான்.

ரத்நம்—"ஆ, அந்த மனுஷன் மகா பெரிய புத்தியீனனாய் இருக்கவேண்டுமே?" என்றான்.

சுந்தரம்—"அவன் யோசிக்கக் கொஞ்சமென்கிலும் கற்றவனல்லாதபடியால் அப்படிப்பட்ட புத்தியீனங்களைச் செய்ய இடமிருந்தது. மேலும் சிலதினங்களுக்குமுன் ஒரு அஷ்டகுரங்கைப்பற்றி ஒரு சங்கதி கேள்விப்பட்டேன். நமக்குச் சமீபமான ஒரு சிறு கிராமத்தில் ஒரு அஷ்டகுரங்கு வெகுநாளாய் வீடுகளில், மிகுந்த சேதங்களை உண்டுபண்ணிக்கொண்டும், ஆட்கள் கையில் அகப்படாமல் தப்பிக்கொண்டும் வந்தது. ஒருநாள் அதைப் பிடிக்கும்படி இரண்டுபேர்கள் அதைத் துரத்திக்கொண்டு ஓடுகையில், வெகு

க்ரமாய் வளர்ந்ததும் மிகவும் மெல்லிசானதுமான ஒரு மரத்தின்பேரில் அக்குரங்கானது ஏறி ஓர் உச்சிக்கொம்பில் உட்கார்ந்துகொண்டது. அதைப் பிடிக்கப்போன அவ்விருவரில் ஒருவன் யோசனையுள்ளவன், மற்றவன் யோசனையற்றவன். யோசனையற்றவன் என்னசெய்தானென்றால், முன்பின் ஒன்றும் யோசியாமல் மெல்லிசான அம்மரத்தின்பேரில் திடீரென்று ஏறி, கொஞ்ச உயரம் ஏறினபின் மரத்தின் மெல்லிய கிளைகள் அவன் பாரத்தைத் தாங்கக்கூடாமல் வளையவும் ஒடியவும் துவக்கினதினால் அவன் கீழே இறங்கிவிட்டான். ஆனால் யோசனையுள்ளவன் என்னசெய்தானென்றால், அவன் உடனே சமீபத்திலுள்ள ஒரு வீட்டுக்கு ஓடிப்போய் ஒரு வெட்டரிவாளைக் கொண்டுவந்து மரத்தின் தூரை வெட்ட, உடனே மரமும் துஷ்டக்குரங்கும் ஒன்றாகக் கீழே விழுந்தன. சமீபத்திலிருந்த ஜனங்கள் குரங்கைப் பிடித்துக்கொண்டார்கள்" என்றான்.

ரத்நம்—"வெகுரோதநி' அத்துஷ்டக்குரங்கு கடைசியில் அகப்பட்டுக்கொண்டதா? சுந்தரம், யோசிக்கக் கற்றுக்கொள்ளுதல் மகா நல்லகாரியமென்று எனக்கு இப்பொழுது நன்றாய்த் தோன்றுகிறது. இன்னும் ஒரு சமயத்தில் இதைப்பற்றி அதிகமாய் நாமிருவரும் பேசவேண்டுமென்று பிரியப்படுகிறேன்" என்றான்.

சுந்தரம்—"மிகவும் நல்லது, இப்பொழுது உன் வளையத்தை உருட்டிக்கொண்டு ஓடு. உன் சிநேகிதன் பூஷணம் ஒருவேளை உனக்காகக் காத்துக்கொண்டிருப்பான். நாளைக்கு நாமிருவரும் இங்கே சந்தித்து யோசிக்கக் கற்றுக்கொள்ளுதலைப்பற்றி சம்பாஷிப்போமாக" என்றான்.

ஐஸ்வரியவான்கள், ஏழைகள்.

"முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை, இன்மை புகுத்திவிடும்"

உலகத்திலே எண்ணிறந்த ஜனங்கள் கஷ்டப்பட்டு உழைத்து மிகுந்த பிரயாசையுடன் ஜீவனம்பண்ணுகிறார்கள். சிலபேர் மாத்திரம் தனவந்தர்களாயிருந்து ஜீவனார்த்தத்தைக் குறித்துக் கிஞ்சித்தும் கவலைப்படாமல் சம்பிரமமாய் வாழுகிறார்கள். இதை

படியாயிற்று? இதற்குக் காரணமென்ன? என்று விசாரிக்குங்கால், அநேகர் அது அவரவர் அதிருஷ்டமென்பார்கள், சிலர் கிரகசாரமென்பார்கள், பலர் எங்களை இப்படியும், அவர்களை அப்படியும் தெய்வம் படைத்தது என்று சொல்லிக் கடவுளை நொந்துகொள்வார்கள். இப்படிப் பலரும் இது விஷயத்தைப்பற்றிப் பல அபிப்பிராயங் கொள்வதுமன்றி, ஐஸ்வரியவான்கள் ஏழைகளை அவமதித்து இகழ்வதும், ஏழைகள் வயிறெரிந்து ஐஸ்வரியவான்களைத் தூஷிப்பதும் சகஜமாயிருக்கிறது. ஆயினும் இதுவிஷயத்தைச் சற்று ஊன்றி யோசிப்போமாகில், பிரகிருதத்தில் உண்டாயிருக்கும் இப்பேதத்துக்காக ஒருவரையும் நொந்துகொள்ள இடமில்லையென்றும், இவ்விரு நிலைமையோரும் இருப்பது தேசத்திற்கு அநுகூலமேயன்றி வேறில்லையென்றும், அதனால் ஒருவர்பேரில் ஒருவர் குறைசொல்லாமல் அவரவர் தம்தம் நிலைமையில் திருப்தியாய் வாழ்வதே உத்தமமென்றும் விளங்கும்.

எத்தேசத்திலாகிலும் வேலைசெய்து பாடுபட்டு ஜீவனஞ்செய்ய வேண்டியவர்களின் தொகையோடு, அன்னவஸ்திரத்தைக் குறித்துக் கவலைப்படாமல் நிர்விசாரிகளாயிருந்து சுகம் அநுபவிக்கும் செல்வர்களுடைய தொகையை ஒத்துப்பார்த்தால், அப்படிப்பட்ட செல்வர்கள் மிகவும் சொற்பமென்றே சொல்லவேண்டும். எல்லாரும் செல்வர்களாயிருக்கிற தேசம் உலகத்திலெங்குமில்லை. அல்லது, செல்வர்களின் தொகை அதிகப்பட்டிருக்கிற தேசமாவது உண்டோவென்றால் அதுவும் கிடையாது. ஆயினும் எல்லாரும் ஏழைகளாயிருக்கிற தேசங்கள் பல உண்டு. அந்தத் தேசங்களிலுள்ள யாவரும் வேலைசெய்து பாடுபட்டு ஜீவனஞ்செய்ய வேண்டுமேயன்றி வேறு வகையில்லை. அப்படியிருப்பதினால் அவர்கள் பாக்கியசாலிகளாயிருக்கிறார்களா? இல்லை. அவர்கள் நம்முடைய தேசத்தில் கூலிவேலைசெய்து பிழைக்கிற அநேகரைப்பார்க்கிலும் மெத்தத் தாழ்ந்த ஸ்திதியிலிருந்து கஷ்டப்படுகிறார்கள். அநேக சமயங்களில் உண்ண உணவும், உடுக்கத் துணியுங்கூடக் கிடையாமல் பலநாள் பட்டினியும் பசிங்கிடந்து அநேகர் உயிராய்ப்போகிறார்கள். ஆனால் நல்ல ஆளுகையும் ஒழுங்கும் நிலைபெற்றிருக்கிற தேசங்களைப்பார்த்தால், அங்கே நாளுக்குநாள் முயற்சி அதிகரிக்கவும், செல்வம் பெருகிவரவும் காண்கிறோம். மிகுந்த உழைப்பும், மிதமான செலவுமுள்ளவர

கள் சாவசோம்பலும் வீண்செலவுமுடையவர்களைப் பார்க்கிலும் அதிகம் சம்பாதித்துத் தங்களுக்குப் போகத் தங்கள் பிள்ளைகளுக்கும் கொஞ்சம் கூட்டிவைக்கிறார்கள். இதனால் அவர்களுக்குப் பிறக்கிற பிள்ளைகள் ஏதுமற்ற ஏழைப்பிள்ளைகள்போலிராமல் செல்வப்பிள்ளைகளாகிறார்கள்.

இந்தப் பிள்ளைகளுக்கு அன்னவஸ்திரத்திற்குத் தட்டில்லாத படியால் இவர்கள் தங்கள் காலத்தை அவமபோக்காமல் நன்றாய்ப் பிரயாசப்பட்டுப் படித்து, நல்ல முயற்சியும் திறமையுமுள்ளவர்களாய் வளருவார்களாகில், அப்படிப்பட்டவர்கள் ஒருவேளை தங்களுடைய செலவுக்கு வேண்டியதைப்பார்க்கிலும் அதிகம் சம்பாதிக்க வகையுண்டு. அப்படிச் சம்பாதித்ததையெல்லாம் திரட்டித் தங்கள் பிள்ளைகளுக்கு ஆஸ்தியாக்கி வைக்கிறார்கள். அவர்கள் பிள்ளைகள் வேலையின்றிச் சும்மா வீட்டில் குந்தியிருந்து சாப்பிட்டுப் பிதுரார்ச்சிதத்தை அழித்துப்போடாமல், தாங்களும் முயற்சிசெய்து விவேகமாயும் புத்தியாயும் நடப்பார்களானால் அந்த ஆஸ்தி வரவரக் குறைந்துபோகாமல் மேலும் மேலும் வளர்ந்து பெருகுகிறது. இதற்கு அநேக திருஷ்டாந்தங்களைப் பிரகிருதத்தில் நமது தேசத்திலும் காணலாம். இப்பொழுது தனவந்தர்களாயிருப்பவர்களுடைய பிதா முற்பிதாக்களுடைய நிலைமையை விசாரித்தால், அவர்களில் அநேகர் மேற்சொல்லியவாறே முன்னுக்கு வந்தார்களென்று வெளியாகும். எத்தனையோ பிச்சையெடுத்துண்கிற ஸ்திதியிலிருந்து முயற்சியினால் தங்கள் தலைமுறையிலேயே லட்சப்பிரபுக்களாயிருக்கிறார்கள். ஆதலால் உலகத்திலே ஐஸ்வரியவான்களாகிறது முயற்சியினாலேயன்றி வேறில்லையென்று தெரிகிறது.

> நனவில் கட்டவிழ் சிறப்பாரும் தாவி
> இலைகலக்கி இழிவாரும் — நிலையிலும்
> மௌனமே யார்த்து சிறப்படாரும் தனைத்
> தலைபாசச் செய்வாரும் தான்

ஆயினும் இதனால் ஒவ்வொருவரும் ஐஸ்வரியவானாகவேண்டுமென்பதல்ல, அப்படி ஆவது சாத்தியமுமல்ல, ஆவசியகமுமல்ல. பொருளாசை தீமையாவற்றிற்கும் வேர். பொருளாசையில் மூழ்கிப்போகலாகாது. ஆனாலும் ஒவ்வொருவரும் நீதிநெறியைவிட்டு விலகாமல் தம்மாலியன்ற பிரயாசப்பட்டு முன்னுக்கு வரப்பார்க்கிறதும், தாம் வருத்தப்பட்டுத் தேடியவற்றுள் தம் செலவுக்குப்போய் மீந்ததைத் தம் பிள்ளைகளுக்குக் கூட்டிவைப்பதும் நியாயமே.

அதுவன்றி அவனவன் வருத்தப்பட்டுத் தேடினதை அவனவன் அப்போதைப்போது செலவழித்துவிடவேண்டுமேயல்லாமல், தனக்காவது தன் பிள்ளைகளுக்காவது கூட்டிவைக்கப்படாதென்றிருக்குமாயின், அது அநியாயமென்று யார்தான் சொல்லார்கள். நன்றாய் உழைத்து வேலைசெய்ய சக்தியுடைய ஒருவன் தனக்குப் பெலனிருக்கும்போது சம்பாதித்து வைத்துக்கொள்ளாமல் அன்றாடம் ஜீவனத்துக்கென்றுமாத்திரம் கொஞ்சம் வேலைசெய்து காலந்தள்ளுவானானால், அப்புறம் அவன் பெலன்குன்றி, பிணியும்படைந்து வேலைசெய்யத் திராணியில்லாமல் தள்ளாடும்போது எவன் அவனை ஏற்றுக்காப்பாற்றுவான்? அவன் சிறுவர்கள் திக்கற்றவர்களாய் நின்று தியங்கும்போது யார் அவர்களை ஆதரிக்கிறது? அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் ஆதரிக்கவேண்டுமென்றால், ஒருவனாவது கூட்டிவைக்கப்படாதென்று சட்டமிருக்கையில் அவனவன் அன்றாடம் தன்தன் பாட்டுக்கு வேண்டியதை மாத்திரம் சம்பாதித்து ஜீவனஞ்செய்வானேயன்றி, ஆஸ்திக்காரனாயிருந்து பிறருக்கு உதவிசெய்கிறவன் எவன்? ஆஸ்தியில்லாவிட்டாலும் அன்றாடம் வரும்படியிலிருந்து அவனவன் தன்தனக்கடுத்த பிறனுக்கு உபகாரஞ்செய்யலாமே என்றால் அது சாத்தியமல்ல. திரண்ட சம்பத்திருந்தும் அதிலிருந்து தனக்கு யாதொரு கஷ்டமும் நஷ்டமுமின்றி பிறருக்குக் கொஞ்சம் எடுத்து ஈவது அரிதாயிருக்க, ஆஸ்தியொன்றுமில்லாமல் அன்றாடம் வேலைசெய்து சம்பாதித்து ஜீவனஞ்செய்யும்போது, அந்நியருடைய பெண்சாதி பிள்ளைகளுக்காகக் கவலைகொண்டு அதிகமாய் உழைத்து, தன் குடும்பசவரட்சணைக்குப்போக மீதி வரும்படிசெய்து அவர்களைக் காப்பாற்றுகிறவர்கள் யார்? உள்ளதுதான், தன்னைப்போலப் பிறனையும் நேசிக்கிற தர்மசிந்தையுள்ள பரோபகாரிகள் சிலரிருக்கலாம். அந்தச் சிலபேரால் எவ்வளவு சொற்ப உதவி நடக்கும்? அதிக பலமுள்ள ஒருவன் மிகுந்த கஷ்டப்பட்டு உழைத்து வேலைசெய்தால், அவன் ஒரு ஆள் அல்லது இரண்டாளைமாத்திரம் ஆதரிக்கக்கூடுமே, அதுவும் எவ்வளவுகாலம் செய்யக்கூடும்? இதுகொண்டு மற்றவர்களுடைய குறைதீர்ந்துபோகுமா? அப்படியிருக்க, அநேகர் இதை யோசியாமல் வீணாய் முறுமுறுக்கிறதுண்டு. தேசத்தில் ஒருவரும் செல்வராயிருக்கக்கூடாதென்று பிரமாணமிருக்குமாகில் ஜனங்களெல்லாரும் நிர்ப்பந்தமான ஸ்தி

திருடர்களாய் விடுவார்கள். எங்கே பார்த்தாலும் குச்சுக் குடிசையும், கந்தைசுற்றிய பிரபுக்களையும் காணலாம். தரித்திரமும் கஷ்டமுமே அந்தச் சட்டத்தின் பயனாய் முடியும். சில தேசங்களிருக்கின்றன, அத்தேசங்களில் யாராவது ஒருவன் செத்தவுடனே, அல்லது சிலசமயங்களில் அவன் உயிரோடிருக்கும்பொழுதே அவன் ஆஸ்திகளையெல்லாம் பறித்துக்கொள்ளுகிறார்கள். ஆகையால் அங்கே ஒருவனாவது மிச்சப்படுத்தி வைக்கவேண்டுமென்று விரும்புகிறதுமில்லை, பிரயாசப்பட்டு வேலைசெய்கிறதுமில்லை. இதனால் அத்தேசங்களிலுள்ள ஜனங்கள் அனைவரும் அஷ்டதரித்திரம்பிடித்து அலைகிறார்களேயன்றி சுகமாயிருந்து வாழக்காணோம்.

வேறுசில தேசங்களுண்டு, அவை ஒருகாலத்தில் நல்ல செழிப்பும் செல்வமும் பொருந்தியிருந்தன, குடிஜனங்களும் நிறைந்திருந்தார்கள். அப்புறம் அவை துருக்கர் முதலியோருடைய கொடுங்கோல் அரசாட்சிகளுள்ளானதோடு பாழும் வனாந்தரமுமாய்ப் போயின. முற்காலத்தில் ஆபிரிக்காக்கண்டத்து வடகரையிலுள்ள பார்பெரி நாடுகளில் பட்டு அமோகமாய் உண்டாயிற்று, இக்காலத்தில் ஒன்றுமில்லை, பட்டுப்பூச்சிகளுக்கு இரையான கம்பளிக்கட்டைச் செடிகளெல்லாம் கெட்டழிந்துபோயின. இதற்குக் காரணமென்னவென்றால், அத்தேசங்களில் தான் பட்ட பிரயாசத்தின் பலனைத் தான் அநுபவிக்கலாமென்கிற நம்பிக்கை ஒருவனுக்காவது கிடையாது. அவரவர் சொத்து அவரவருக்கே உரியது என்கிற பத்திரதையுமில்லை, பந்தோபஸ்துமில்லை. எல்லாம் நினையாத நேரத்தில் பறிபோய்விடும் என்கிற நிச்சயமாத்திரமுண்டு. இவ்வளவு சீர்கெட்ட ஆளுகையில் என்ன வேளாண்மைதான் கைகூடிவரும்? எந்தக் கைத்தொழில் விருத்தியாகும்? யார்தான் சுகத்தை அநுபவிக்கப்போகிறார்கள்?

சிலர் சொல்லுவார்கள், சரிதான், இதெல்லாம் நல்ல அரசாட்சியில்லாத நாடுகளில் நடக்கத்தக்கது, ஆனால் இப்பொழுது நம்முடைய தேசத்தில் ஐசுவரியவான்களிடத்திலிருக்கும் திரவியங்களையெல்லாம் எடுத்து ஏழைகளுக்குப் பங்கிட்டுக்கொடுத்து, இனிமேற்பட்டு ஒருவனும் ஐசுவரியவானாகப்படாது என்று சட்டம் பிறப்பித்துவிட்டால், அப்பொழுது ஏழை எளியவர்களென்னும் இல்லாமல் எல்லோரும் ஒன்றுபோல சமநிலைமையிலிருந்து வா

மூலாம் என்று நினைப்பார்கள். நல்லது, அப்படிப் பகிர்ந்துகொடுத்தாலும் யாராவது சிலர் உழைத்துப் பாடுபடவேண்டியது அவசியம். இல்லாவிட்டால் அன்னவஸ்திரம் எங்கேயிருந்து வரும்? பாடுபட்டாலொழியப் பூமி பலன்தரமாட்டாதே. எல்லாரும் ஒன்றுபோலிருக்கையில் பாடுபட்டு வேலைசெய்கிறது யார்? எல்லாருந் தான் என்றால் அப்பொழுது ஒவ்வொருவரும் அவரவர் பாட்டுக்கு வருந்திப் பிரயாசப்பட்டுக் காட்டுஜனங்கள்போல வயிறு மாத்திரம் வளர்த்துக்கொண்டு திரிவார்களேயன்றி, இப்பொழுது நடக்கிறதுபோல் பொதுப்பிரயோஜனார்த்தமான வேலைகள் ஒன்றாவது நடக்காது. ஏனென்றால் தொழிலாளிகளுக்குச் சம்பளம் போடவோ, வேலைக்காரருக்குக் கூலிகொடுக்கவோ ஒருவரிடத்திலாயினும் பொக்கிஷமுமில்லை களஞ்சியமுமில்லை. ஏன்? யாராவது சேர்த்துவைக்கத் துவக்கினால் அவன் ஐஸ்வரியவானாகப்போகிறானென்று அவனிடத்திலுள்ளதை எடுத்துப் பகிர்ந்துகொடுத்துவிடுவார்களே. மேலும் அவரவர்க்குரிய சொற்பவேலையுங்கூட அதிக கஷ்டமும் வெகு தாமதமுமாய் முடியும். பல துறைகளிலும் தனித் தனி தேறிய பலர்கூடிச் செய்யவேண்டிய ஒரு வேலையை ஒருவர் இருவராய்மாத்திரஞ்செய்வது எளிதல்ல. திருஷ்டாந்தமாக, செங்கல் அறுப்பதும், சுவர்வளர்ப்பதும், கதவுசேர்ப்பதும், தாழ்ப்பாள் அடிப்பதும் ஒருவனால் முடியவேண்டுமானால் எவ்வளவு காலஞ் செல்லும்? என்ன கஷ்டமிராது? ஆதலால் ஒவ்வொருவரும் அவரவர்க்குரிய சொற்பநிலத்தை அவரவர்பாட்டுக்கு உழுது பயிரிட்டு கையிற்பொறுக்கி வாயிலடித்துக்கொண்டு மிலேச்சர்கள்போலக் காலந்தள்ளவேண்டும்.

நல்லது அப்படியிருந்தாலுமென்ன? ஒவ்வொருவருக்கும் சாப்பாட்டுக்காவது குறைவில்லாதிருக்குமே, அது போதுமென்று சிலர் சொன்னாலும் சொல்லுவார்கள். காரியம் அம்மட்டோடே மாத்திரம் நின்றுவிடுமானால் ஒருவேளை அது நல்லதெனலாம். அப்படியல்ல, சில குடும்பங்களில் நீண்டபிணி, தீராவியாதி முதலிய துன்பங்கள் நேரிட்டால், அல்லது மழைத்தாழ்ச்சியினாலாவது வேறு காரணத்தினாலாவது இரண்டொருவருஷம் விளைச்சல் குன்றித் தேசத்தில் பஞ்சம் வந்துவிட்டால் அப்பொழுதுஎன்ன செய்வார்கள்? பட்டினிகிடந்து உபத்திரவப்பட்டுச் சாகவேண்டுமேயொழிய வேறுவழியில்லை. கையிலுள்ள அற்பசொற்ப ஆஸ்

டியெல்லாம் சீக்கிரத்தில் செலவாய்விடும், விதைமுதலுமிராது. திராணியுள்ளவர்கள் வேலைசெய்தாவது உயிரைக் காப்பாற்றுவோமென்றால் வேலைகொடுக்கிறவர்கள் யார்? முதலாவது வேலைதான் எங்கே? அதற்குக் கொடுக்கப் பணமுதல் எது? ஏகதேசம் சிலர் எப்படியாவது மிச்சம்பிடித்துச் சேர்த்துவைக்கிற சொற்ப பணமுங்கூட வெளிக்குத்தெரிந்தால் பறிபோய்விடும் என்கிற பயத்தினால் அதைப் பூமிக்குள் புதைத்துப் பத்திரப்படுத்துவார்களேயன்றி வெளிக்குக்காட்டமாட்டார்கள். வேலைகிடைப்பது அரிது. இதற்குத் திருஷ்டாந்தம் வேறு தேசங்களில் தேடவேண்டாம். கொஞ்சகாலத்துக்குமுன் நம்முடைய தேசம் மகம்மதியருடைய அரசாட்சிக்குள்ளாயிருந்தகாலத்தில் நடந்த வர்த்தமானங்களும், இந்நாள்வரையும் கண்டெடுக்கப்படும் புதையல்களும் போதுமான நிதர்சனங்களாயிருக்கின்றன. ஒவ்வொருவரும் அவரவர்பாட்டுக்கு அப்போதைப்போது வேண்டியமட்டு மாத்திரம் சம்பாதித்துக்கொள்ளப் பிரயாசப்படுவார்களானால் இப்பொழுது நடக்கிறதுபோல் தேசத்தில் அவ்வளவு வேலை நடவாது, பல தொழில்துறைகளில் தனித்தனி தேறிய தொழிலாளிகளும் வேலையாட்களும் கிடையாது. அதனால் தேசத்தின் விளைவும், செழிப்பும் மெத்தக் குன்றிப்போம். ஜனங்கள் வறுமையடைந்து வருந்துவார்கள் மெய்யான ஐசுவரியவான்களெல்லாம் தரித்திரராய்ப் போவார்கள். அதனால் வருகிற லாபமென்ன? ஏழைகளெல்லாம் முன்னிலும் அதிக ஏழைகளும் நிர்ப்பாக்கியருமாவார்களேயன்றி சுகம் அநுபவிக்கப்போகிறதில்லை இப்பொழுது செல்வர்களாலுண்டாகிற நன்மைகளில் ஒன்றும் அப்பொழுகிராது எல்லாரும் ஏழைகளானால் உதவிசெய்வாரும் பிச்சையிடுவாருங்கூட அற்றுப்போம் இதனாலேதான் பல நிவுதிவாந்தரங்களிலும் கொடுங்கோலரசாட்சியுள்ள நாடுகளிலும் குடிகள் நாளுக்குநாள் பலுகிப்பெருகி விர்த்தியடையாமல் வரவர நொந்து குறைந்து குறுகிப்போகிறார்கள்

ஆதலால் அவரவருடைய ஆஸ்தியின்பேரில் அவரவருக்கேயுரிமை, மற்றவர்களுக்கு யாதொரு பாத்தியதைக்கும் இடங்கொடாமலிருப்பதும், ஒவ்வொருவருடைய சொத்தும் பத்திரமாயக் காக்கப்படுவதும், எல்லோரும் நல்வழியில் பொருளைச்சம்பாதித்து அதைப் பிறருக்குச் சங்கடமில்லாமல் தாங்கள் செலவழிக்

கவாவது சேர்த்துவைக்கவாவது இடம்பெறுவதுந்தான் ஐஸ்வரிய வான்கள் ஏழைகள் இவ்விருதிறத்தாருக்கும் மத்தியிலுள்ளவர்கள் ஆகிய எத்திறத்தவர்களுக்கும் அநுகூலமான உத்தமவழியாம்.

(இன்னும் வரும்.)

லோபியைப் பற்றின கதை.

எச்சிற்கைகொண்டு காக்கை விரட்டாத பரமலோபி ஒருவன் இருந்தான். அவன் இறந்தபின் அவனை நரகலோகத்திற்குக் கொண்டுபோகையில், வழியில் ஓர் ஆறு குறுக்கிட்டது. அங்கே சேருகிற பாபிஷ்டிகளெல்லாம் அந்த ஆற்றைக் கடத்திவிடும்படி வைத்திருக்கிற ஓடக்காரனுக்கு ஒரு காசு கொடுத்து அக்கரைப் படுவது வழக்கமாம். அந்தப்பிரகாரம் ஓடக்காரன் மற்றவர்களிடத்திலெல்லாம் வாங்கிக்கொண்டு, இந்த லுத்தனண்டைவந்து காசு கேட்டான். அதற்கு அவன்: நமக்குத்தான் நீந்தத்தெரியுமே, பின்னை ஏன் இந்த ஓடக்காரனுக்குக் காசு வீணுய்க்கொடுக்கவேண்டும் என்று சொல்லி, திடீரென்று நதியிற்பாய்ந்து, அங்குள்ளவர் என்ன தடைசெய்தாலும் பின்வாங்காமல் நீந்தி அக்கரைசேர்ந்தான். இந்தச் செய்தி நரகவாசிகளுக்கு எட்டினவுடனே அங்கே பெரிய அமளியுண்டாயிற்று. பாதாளலோக வரும்படிக்கு இடையூறுண்டாகத் துணிகரத்துடன் இவ்வளவு பெரிய குற்றஞ்செய்த இந்தத் துராத்மாவுக்கு என்ன தண்டனைசெய்யலாம்? மலையுச்சியிலிருந்து தலைகீழாக உருட்டலாமா? கையும் காலும் சங்கிலிகளாற்கட்டி நித்திய இருளில் போடுவோமா? இயந்திரத்தில் வைத்துத் திரிப்போமா? எது இவனுக்கு ஏற்ற தண்டனையென்று அங்குள்ள நியாயாதிபதிகள் ஆலோசித்தார்களாம். அதில் ஒருவர் எழுந்துநின்று: இந்தப் பிசினியினுடைய குற்றத்துக்கு இதெல்லாம் போதாது. இவன் மனதுக்கு அதிக வேதனையுண்டுபண்ணத்தக்க கொடிய தண்டனை ஒன்றுண்டு. அதென்னவெனில் இந்த லோபியைப் பூலோகத்துக்கு அனுப்பி அங்கே இவன் சேர்த்துவைத்த ஆஸ்திகளையெல்லாம் இவன் பிள்ளைகள் அழிக்கிறதை இவன் கண்ணாரக்காணச் செய்யவேண்டும் என்றார்.

லோபியின் மனதுக்குத் தன் பொருட்செலவழிக்கிறதுபோலத் துன்பமான விஷயம் வேறொன்றும் இல்லையென்பது கருத்து.

(Xerxes) கசெர்க்செஸ் என்னும் பெரசிய தேசததின் அரசன்

பெரசியதேசததின அரசனுகிய கசெரசசெஸ எனபவன கிரே ககதேசததுககு விரோதமாயப படையெடுததுபபோய யுததஞ செயய நோககமாயிருநதபோது, தன பெரிய தகபபனவுடை போய ஆலோசனை கேட்டான. அபபோது அவன அரசனை நோககிச சொனனதாவது "ஐயா' என முதிாநதவயதிறகும அநுபவததிறகுந தககதாகவும, உன நலவாழவைககுறிதது எனககுண்டாயிருககிற கவலைககுத தககதாகவும இககருணததில உனககுச சில யோசனைகளைச சொலல இடஙகொடுபபாயா? உன்னுடைய தகபபனும், என சகோதரனுமாகிய தரியு எனபவா சிரியருககு விரோதமாய யுததஞசெயய நோககமாயிருநதபோது அதறகுத தடைசெய்யுமபடிககு எனனுலானமட்டும பிரயாசபபட்டேன அநத ஜாதியாரைபபாாககிலும கிரேககா மிகவும அதிக பலசாலிகளாயிருககிருாகளே, தாநிஸ ஆததபெனஸ எனனும படைததலைவாகள நடததின திரளான சேனையை கிரிஸிலுளள ஒரு ராசசியததாராகிய அததேனரே மடககிடிததிருகக, அதிலுளள சகல ராசசியததாரும ஒருமிககச சோநது உன சேனையை எதிாககும விஷயததில அவாகள எனனதான செயயமாட்டாாகள. (Hellespont) எலலெஸபான்ட என்னும கடல வாய்ககாலின் பேரில ஓா வாராவதியைக கட்டி, நீ உன திரண்ட சேனையுடன ஆசியாகண்டததைக கடநது ஐரோபபாவுககுபபோக நோககமா இருககிருயே. ஆனல் அததேனா வநது அநத வாராவதியை யிடிததுபபோட்டு உன சேனையைத திருமபிபபோகாதபடிககுச செயதால எனனசெய்வாய? அதினல உனககும சேனைககும என்ன மோசஙகள சமபவியாது. விருதாவில நமமை அமமோசஙகளுககுட்படுததாதிருபபோமாக விசேஷமாய அபபடிச் செயவதறகு நமககுப போாதத நியாயஙகளிலலாதிருககும்போது, இககாரியததைபபறறி நாம நீககாலோசனை செய்யவேண்டியது மிகவும ஆவசியகமான காரியம எககாரியத

தைக்குறித்தாவது நாம் முதலில் திக்காலோசனை செய்திருப்பமானால், பின்பு அது சித்தித்தாலும் சித்திக்காவிட்டாலும் நாம் துக்கப்படுவதற்கு இடமிராது. படபடப்பானது விவேகமற்ற காரியம் மேலும் அது பொதுவாய் அநுகூலமாய் முடிகிறதுமில்லை. மகா ராஜப்பிரபுவே! எல்லாவற்றைப்பார்க்கிலும் விசேஷமாய் விண்மகிமையின் பிரகாசத்தைப்பார்த்து மயங்கிப்போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. ஏனெனில் மிகவும் உன்னதமான விருக்ஷங்கள்தான் விசேஷமாய் இடியினால் அழிக்கப்படுகின்றன என்றான்.

பின்பு அவன் அரசனுடைய சேனைத்தலைவனாகிய (Mardonius) மாரதோனியு என்பவனைப்பார்த்து கிரேக்க தேசத்துக்கு விரோதமாய் ராணுவத்தைக் கொண்டுபோகவேண்டுமென்றுசொல்லுகிற மாரதோனியுவே! நீதானே சேனையை நடத்திக்கொண்டுபோ. நம் மெல்லாருக்கும் அருமையாயிருக்கிற நமது ராஜன் பாரசுதேசத்திலேயே இருக்கட்டும், இந்த யுத்தம் நமக்கு அநுகூலமாய் முடியுமென்பதை நிச்சயப்படுத்தும்படிக்கு உன் பிள்ளைகளை ஜாமீனாக ஒப்புக்கொடு நான் என் பிள்ளைகளை ஜாமீனாக வைக்கிறேன். காரியம் சித்தித்தால் என் பிள்ளைகள் கொலைசெய்யப்படுவதற்குச் சம்மதிப்பேன். அது சித்திக்காவிட்டால் உன் படபடப்புக்குத்தக்க ஆக்கினையை உன் பிள்ளைகள் உத்தரிப்பதற்குச் சம்மதி என்றான்.

இவ்விதமாய் தன் பெரியதகப்பன் தனக்குச் சொன்ன தெளிவும் விவேகமுமான யோசனைகளைக் கேட்ட ராஜனானவன், அந்த நல்ல யோசனைகள் தன் பெருமைக்கு விரோதமாயிருந்தனவென்று கண்டு அகங்காரங்கொண்டு தன் பெரியதந்தைக்குச் சொன்ன பிரதியுத்தரமாவது நீ என் தகப்பனுடைய சகோதரனாயிருப்பதனால் தேவர்களுக்கு நீ வந்தனஞ்செலுத்தவேண்டும் ஏனெனில் அப்படியில்லாதிருந்தால், உன் துணிகரமுள்ள இந்த நடத்தைக்குத்தக்க ஆக்கினையை இக்ஷணமே நீ அடைந்திருப்பாய் ஆகிலும் உனக்கு ஒருவித தண்டனை செய்வேன், நீ எப்பொழுதும் பெண்பிள்ளைகள் நடுவே இருக்கும்படி கட்டளையிடுகிறேன். பயத்திலும் அதைரியத்திலும் நீ பெண்களுக்கொப்பாயிருக்கிறாய், என் கடமையும் என் மகிமையும் என்னை ஏவுகிற இடத்திற்கு நானும் என் சேனைகளும் தைரியமாய்ப்ப

…கப் பிரயாணப்படகையில் நீ பெண்கள் நடுவேயிரு என்றான். பின்பு அவன் தன் திரளான சேனைகளுடன் கிரேக்கதேசத்திற்குப்போய் யுத்தஞ்செய்தான். ஆனால் கிரேக்கஜாதியார்கள் வீரியத்திலும், பராக்கிரமத்திலும், போர்ச்செய்கைகளிலும், விவேகத்திலும் பேர்போனவர்களாயிருந்தபடியால், அவர்கள் அவனுடைய திரளான சேனைகளைச் சீக்கிரத்தில் மடங்கடித்து அவர்களில் அநேகமாயிரஞ் சனங்களை அதம்பண்ணினதினால் ராஜனானவன் வெட்கத்தோடே கிரேக்கதேசத்தைவிட்டு தன் உயிர்தப்ப ஓட்டம்பிடிக்கும்படி நேரிட்டது. விவேகமுள்ள தன் பெரியதகப்பனுடைய நல்லாலோசனையை அவமதித்துத் தள்ளினதினால் அவனுக்கு இத்தனை பெரிய கேடுகள் சம்பவித்தன.

பழமொழிகள்.

ஏறப்படாத மரத்திலே எண்ணப்படாத காய்.

காய்த்தமரங் கல்லெறியப்படும்.

கரும்புக்கட்டாலே கழுதையையடித்தால், கழுதையறியுமோ கரும்புருசி.

சமாசார சங்கிரகம்.

நூதன வருமான வரிச்சட்டம்.—சென்ற ஏப்பிரல்மீ துவக்கத்தில் நூதன வருமானச் சட்டமொன்று கவர்னர் ஜெனரலின் சட்ட நிரூபணசபையில் ஏற்படுத்தப்பட்டது. இதினால் வருஷமொன்றுக்கு (500) ஐந்நூறு ரூபாய் வரும்படியுள்ள பிரஜைகளெல்லாம் இதுவரையில் நூற்றிற்கு ஒன்றுவீதஞ் செலுத்திவந்த வரியானது இப்போது நூற்றிற்கு மூன்றேயரைக்கால் வீதமான வரியாக ஏற்றப்பட்டிருக்கின்றது. இந்நூதன வருமானச்சட்டமானது பிரஜைகளுக்கு மிகுந்த உபத்திரவத்தை விளைவிக்கத்தக்கதாயிருப்பதாலும், இந்திய அரசிறையைச்சேர்ந்த காரியங்களில் பல குழப்பங்கள் நேரிட்டு இத்தேசத்திற்குப் பல தீமைகளுண்டாகும்போலத் தோன்றுகிறபடியாலும், கல்க்குத்தா, பம்பாய், சென்னைமுதலிய

நகரங்களிலுள்ள நகரவாசிகள் அந்தந்த இடங்களில் ஆலோசனைச் சபைகளில் கூடிவந்து காரியங்களைப்பற்றி நிர்க்காலோசனைசெய்து இங்கிலாந்திலுள்ள பார்லிமெந்துசபைக்கும இந்திய அரசாங்க மந்திரிக்கும் விஞ்ஞாபனபத்திரங்கள் எழுதியனுப்பியிருக்கிறார்கள். இவ்விண்ணப்ப பத்திரங்களில் பல குழப்பங்கள் நேரிட்டிருக்கிற இந்திய அரசிறையைச்சேர்ந்த காரியங்களை ஸ்திரமாய் விசாரிக்கத்தக்க கமிஷனர்களை இங்கிலாந்திலிருந்து இவ்விடத்துக்கு அனுப்பவேண்டுமென்றும், இப்பொழுது அரசிறைக்கர்த்தராயிருப்பவருக்குப்பதிலாக திறமையுள்ள வேறொருவர் இங்கிலாந்திலிருந்து நியமிக்கப்பட்டு இங்கு வரவேண்டுமெனவும், அநாவசியகமாக இப்பொழுது ஏற்பட்டிருக்கிற வருமானச்சட்டத்தைத் தள்ளவேண்டுமென்றும் பலமான ஞாயங்களைக்காட்டிப் பிரார்த்தனைசெய்திருக்கிறார்கள். ஆகையால் சீக்கிரம் காரியங்கள் அநுகூலமாய் முடியுமென்று நம்புகிறோம்.

கவர்னர் வித்தியா சம்பளம்.—இதைப்பெற்ற வித்தியார்த்தியின் பேர். ம. டி. கோபாலாச்சாரி. இவருக்குப் பருவம் பதினேழு; சென்ற டிசம்பர்மாசப் பிரவேசப்பரிக்ஷையில் தேறினவர்களின அட்டவணையில் இவர் இரண்டாவதானவர். இவ்வித்தியா சம்பளம் வருஷமொன்றுக்கு ரூபாய் முன்னூறு. இது மூன்று வருஷம்வரையில் அநுபவிக்கக்கூடியது.

உஷ்ணஜன்னி.—சென்னையில் இப்போது உண்டாயிருக்கிற கொடிய உஷ்ணத்தினால் ஜனங்களுக்கு மிகுந்த உபத்திரவங்கள் தலைப்படுகின்றன. சென்ற இரண்டு மூன்று வாரங்களுக்குள்ளாக ஏழெட்டுபேர்கள் அளவுக்குமிஞ்சிய உஷ்ணத்தினால் உஷ்ணஜன்னிகண்டு சடுதியில் இறந்துபோனார்கள். சீக்கிரம் மழை வருஷியாவிட்டால், தண்ணீர்த்தட்டினால் ஜனங்களுக்குப் பெரிய துன்பங்கள் நேரிடும்போலத் தோன்றுகிறது.